
உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சைவநீதி
# SAIVANEETHI



| மலர் 07 | சுபானு - சித்திரை | APRIL- MAY 2003 | இதழ் 01 |
| --- | --- | --- | --- |



ரூபா 25/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவரிமாற்றம்

**No. 30, Ramya Road,**

**Colombo-04.**

சைவநீதி முகவரி மாற்றப்பட்டுள்ளது. இனி மேல் தாங்கள் மேலுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாக ஆசிரியர்

# பொருளடக்கம்

பக்



1. இன்றையதேவை ....................01
2. அகத்தியர் தேவாரத்திரட்டு ....................02
3. அகத்தியர் தேவாரத்திரட்டு விடய அட்டவணை ....................03
4. பதிகவரலாறுகள் ....................04
5. திருஞானசம்பந்தர் அருளிய திருப்பரம்பரம் ....................05
6. தெய்வத்திருமுகங்கள் ....................08
7. தஞ்சைப்பெரியகோயில் புதிய கொடிமர கவசங்கள் மெருகேற்றப்படுகின்றன ....................10
8. பதினெண்சித்தர்கள் ஸ்ரீ தேரையர் ....................11
9. சூரியன் கட் படலம் கண்டுபிடிப்பு ....................11
10. திருவிசைப்பா ....................12
11. சிவப்பிரகாசம் ....................16
12. திருக்கோயில் வழிபாடு ....................19
13. சைவப்பெரியார் புலோலியூர் சிவபாதசுந்தரனார் ....................24
14. சைவபூஷணம் தமிழ்விளக்கம் ....................26
15. நினைவிற் கொள்வதற்கு


சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். -இதழ் நிர்வாகிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



# சைவநீதி

மலர் [illegible] - [illegible] - சைவநீதி [illegible] இதழ் - 1

நிறுவனர்:
[illegible]
[illegible]
திரு. [illegible]

மதியுரைஞர்:
சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்

திரு. P. M. கையாசிநாதன்
அறங்காவலர்,
ஸ்ரீ [illegible] தேவஸ்தானம்

திரு. அ. கந்தசாமி
Chairman U.P.S

திரு. கு. [illegible]

பதிப்பாசிரியர்:
திரு. செ. திருநாவுக்கரசன்
[illegible]

விநியோகம்:
திரு. க. சிவகுமார்
[illegible]

நிர்வாக ஆசிரியர்:
திரு. செ. நவநீதகுமார்
30, [illegible], கொழும்பு 04.

தொடர்புகட்கு: 7.30 p.m. to 7.30 a.m.

தொலைபேசி: 580458

## இன்றைய தேவை

சமய வளர்ச்சிக்குப் போதனை மிகவும் அவசியமானதாகும். சமய உண்மைகளைத் தத்துவங்களை சமயம் சார்ந்து வாழ்க்கைமுறையினை மக்கள் விளங்கிக்கொள்ளக் கூடியதாக அறியப்படுத்தவேண்டும். மதமாற்றம் நடைபெறுவதற்கு முதன்மைக்காரணம் எமது சமயம் பற்றிய உண்மைகளை அறிந்துகொள்ளாமையே. இவற்றை மக்கள் மத்தியில் அறியப்படுத்த இரண்டு வழிகள் உண்டு. ஒன்று பிரசாரம் மற்றையது பிரசுரம். ஆறுமுக நாவலரின் பணி இவை இரண்டுமே.

மக்கள் மத்தியிலே நகர மேடைகளில் பேசி விழா எடுப்பதனால் மாத்திரம் சமய அறிவை ஏற்படுத்திவிட முடியாது. கோயில்களில் மக்கள் குழுமியிருக்கும் வேளைகளில் வெள்ளிக்கிழமை தோறும் பிரசங்கம் செய்வித்தல் வேண்டும். இதற்குத் தகுதியானவர்களைப் பயிற்றுவித்து அவர்கள் மூலம் வழிபாட்டுமுறை, சைவவாழ்க்கை நெறிமுறை, ஒழுக்கம் போன்றவற்றைப் போதிக்க வேண்டும். கோயில் நிர்வாகத்தினரும் சமயம் சார்ந்த நிறுவனங்களும் இப்பணியை முன்னின்று நடத்த வேண்டும். இன்றைய அவசியத்தேவை இது.

இதேபோல பிரசுரங்கள் மூலமாகவும் சமயக்கருத்துக்களை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். எமது நாட்டிலே பல சமய சஞ்சிகைகள் வெளிவந்தன. குறுகியகாலத்தில், வெளிவர முடியாது நின்றவையும் உண்டு. தொடர்ச்சியாகச் சைவசமயச் சஞ்சிகை வெளியிடுவதில் பலசிரமங்கள் உண்டு. பொருளாதாரச் சிக்கல், வாசகர்களின் ஆதரவு இல்லாமை போன்றவைகளாலும் தடை ஏற்படலாம்.

இறைவன் திருவருளால் சைவநீதி அகவை ஆறு பூர்த்தியாகி ஏழாவது அகவையில் பிரவேசிக்கிறது. சைவநீதி மூலம் சைவ மக்கள் மத்தியில் சமய அறிவு வளர வேண்டும் என்று பெருவிருப்புடன் பணியாற்றிச் சிவபதமடைந்த எமது தந்தையார் காட்டிய வழியில் உங்கள் சிந்தைக்கு விருந்தாகப் பல விடயங்களை உள்ளடக்கி சைவநீதி மிளிரவுள்ளது. உங்கள் ஆதரவு எங்கள் சேவையை மேம்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# அகத்தியர் தேவாரத்திரட்டு

அகத்தியர் தேவாரத்திரட்டு என்பது இத் தொகுப்பு சிவாலய முனிவருக்காக அகத்திய முனிவரால் தொகுத்து அளிக்கப்பட்டதாகும். தேவாரப்பதிகங்களின் தொகை ஒருலட்சத்து முவாயிரம். இதில் இப்போது கிடைத்துள்ளவை எழுநூற்றுத்தொண்ணூற்றேழு பதிகங்கள். இவற்றை ராஜராஜசோழன் நம்பியாண்டார் நம்பி மூலம் முதல் ஏழு திருமுறைகளாக வகுப்பித்தான். இவை அடங்கன் முறை எனப்படும். இவற்றை அருளிச் செய்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் தேவார முதலிகள் எனப்படுவர். நாள்தோறும் விதிப்படி அடங்கன் முறையை பாராயணம் செய்தால் இம்மைக்கு சகல செல்வபோகமிக்க பெருவாழ்வும், மறுமைக்கு முத்தியும் கிடைக்கும் என்று அறிந்தார் சிவாலய முனிவர்.

தினந்தோறும் அடங்கன் முறையைப் பாராயணம் செய்ய விரும்பினார். அது கைகூடாமையால் சிதம்பரத்தை அடைந்து நடராஜப் பெருமானை வணங்கித் தம் கருத்து முடியும் வண்ணம் அருளவேண்டித் தவமிருந்தார். "சிவாலய முனிவனே பொதி மலைக்குச் சென்று அகத்திய முனிவனை அடைவாய் உன் எண்ணம் நிறைவேறும்" என்று அசரீரி வாக்குத் தோன்றியது. சிவாலய முனிவர் நடராஜப்பெருமானை வணங்கி விடை பெற்றுப் பொதிகை மலையைச் சென்றடைந்தார். அங்கு மூன்று வருடங்கள் தவம் செய்ய, அகத்தியர் அவர்முன் தோன்றினார். சிவாலய முனிவர் தன் எண்ணத்தைக் கூற அகத்தியர் அடங்கன் முறை முழுவதையும் சிவாலய முனிவருக்கு உபதேசித்து அவற்றிலிருந்து இருபத்தைந்து பதிகங்களைத் திரட்டி இவற்றை நாள்தோறும் பாராயணம் செய்தால் அடங்கன் முறை முழுவதையும் பாராயணம் செய்த பலன் கிடைக்கும் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

சிவாலய முனிவர் இவ் இருபத்தைந்து பதிகங்களையும் நாள்தோறும் பாராயணம் செய்து சிவபெருமான் திருவருளைப் பெற்றார்.

இம்மாதம் தொடக்கம் அகத்தியர் தேவாரத் திரட்டு சைவநீதியில் இதழுக்கு ஒருபதிகமாக மாதந்தோறும் வெளிவரவுள்ளது.

❑ ❑ ❑

**வைகறையில் செய்ய வேண்டியவை**

**வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்**
**நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதில்**
**தந்தையுந் தாயுந் தொழுதெழுக என்பதே**
**முந்தையோர் கண்ட முறை.**

*(பொ-ரை)* வைகறையாகிய பின்யாமத்திலே துயிலெழுந்து தான் பின்றைஞான்று செய்யும் நல்லறத்தையும் ஒள்ளிய பொருட்கு வருவாயாகிய காரியத்தையும் ஆராய்ந்து சிந்தித்து, பின்னைக் கடன் புணர்ந்தால் பழுதின்றித் தந்தையையும் தாயையும் தொழுதெழுந்து ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குக என்று சொல்லப்படும் ஒழுக்கம் அறிவுடைய பழையார் சொல்லிய முறைமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகத்தியர் தேவாரத்திரட்டு

## விடய அட்டவணை

| எண் | விடயம் | பாடியவர் | பதிகமுதற்பாடல் | தலம் | செய்யுள் |
|---|---|---|---|---|---|
| 1 | குருவருள் | திருஞானசம்பந்தர் | தோடுடைய | திருப்பிரமபுரம் | 11 |
| 2 | குருவருள் | திருநாவுக்கரசர் | கூற்றாயின | திருவதிகைவீரட்டானம் | 10 |
| 3 | குருவருள் | சுந்தரர் | பித்தா | திருவெண்ணெய்நல்லூர் | 10 |
| 4 | திருநீற்றுப்பதிகம் | திருஞானசம்பந்தர் | மந்திரமாவது | திருவாலவாய் | 11 |
| 5 | பஞ்சாக்கரத்திருப் பதிகம் அஞ்செழுத் துண்மை | திருஞானசம்பந்தர் | துஞ்சலும் | — | 11 |
| 6 | நமச்சிவாயத் திருப்பதிகம் அஞ்செழுத்துண்மை | திருஞானசம்பந்தர் | காதலாகி | — | 11 |
| 7 | ,, | திருநாவுக்கரசர் | சொற்றுணை | — | 10 |
| 8 | ,, | சுந்தரர் | மற்றுப்பற்று | திருப்பாண்டிக்கொடுமுடி | 10 |
| 9 | திருக்ஷேத்திரக் கோவை (கோயில்) | திருஞானசம்பந்தர் | ஆரூர்தில்லை | ———— | 11 |
| 10 | ,, | திருநாவுக்கரசர் | தில்லைச்சிற்றம் | ———— | 11 |
| 11 | ஊர்த்தொகை (கோயிற்றிறம்) | சுந்தரர் | காட்டூர் | | 10 |
| 12 | திருவெழுகூற் றிருக்கை சிவனுருவம் | திருஞானசம்பந்தர் | ஓருருவாயினை | ———— | 11 |
| 13 | சிவனுருவம் | திருஞானசம்பந்தர் | வரியமறை | திருக்கடவூர்மயானம் | 11 |
| 14 | கோயிற்றிருவிருத்தம் சிவனுருவம் | திருநாவுக்கரசர் | பாளையுடைக் | ———— | 10 |
| 15 | சிவனுருவம் | திருநாவுக்கரசர் | வடிவேறு | ———— | 11 |
| 16 | சிவனுருவம் | சுந்தரர் | மருவார் | திருக்கடவூர்மயானம் | 10 |
| 17 | திருவடிகள் | திருஞானசம்பந்தர் | பொடியுடை | திருவாழ்கொளிபுத்தூர் | 11 |
| 18 | திருவடிகள் | திருநாவுக்கரசர் | அரவணையான் | திருவதிகைவீரட்டானம் | 10 |
| 19 | திருவடிகள் | சுந்தரர் | அந்தணாளன் | திருப்புன்கூர் | 10 |
| 20 | அருச்சனை | திருஞானசம்பந்தர் | பந்துசேர் | திருப்பூந்தராய் | 11 |
| 21 | அருச்சனை | திருநாவுக்கரசர் | வேற்றாகி | ஸ்ரீ கயிலாயம் | 11 |
| 22 | அருச்சனை | சுந்தரர் | கொன்றுசெய்த | திருக்கழுக்குன்றம் | 10 |
| 23 | கோளறு திருப்பதி கம் அடிமை | திருஞானசம்பந்தர் | வேயுறுதோளி | ———— | 11 |
| 24 | திருவாரூர்திரு விருத்தம் அடிமை | திருநாவுக்கரசர் | குலம்பலம்பா | திருவாரூர் | 10 |
| 25 | திருத்தொண்டத் தொகை அடிமை | சுந்தரர் | தில்லைவாழ் | ———— | 11 |
| | | | | | 264 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிக வரலாறுகள்

1. தோணியப்பர் ஞானசம்பந்தருக்குச் சிவஞானப் பாலை ஊட்டியருள ஞானசம்பந்தரைச் சிவபாதவிருதயர் "உனக்குப் பாலூட்டியவர் யார்" என்று கோபித்துக் கேட்டனர். திருஞான சம்பந்தர் தமக்குப்பாலூட்டி ஆட்கொண்டருளிய தோணியப்பரைத் தமது கைத் திருவிரலால் சுட்டிக்காட்டிப் பாடி அருளியது.

2. திருநாவுக்கரசு சுவாமிகள் தம்முடைய சூலைநோய் தீரும்பொருட்டுப் பாடியருளியது.

3. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமணக்காலத்தில் சிவபெருமான் வழக்கிட்டுத் தடுத்தாட்கொண்டபோது பாடியது.

4. திருஞானசம்பந்த சுவாமிகள் திருச்செங்கோட்டில் அடியார்களைப்பற்றிய குளிர்நோயைத் தீர்க்கும் பொருட்டுப்பாடியது.

5. திருஞானசம்பந்த சுவாமிகள் தமக்கு சீகாழியில் உபநயனம் நடந்த காலத்தே அந்தணர்களுக்கு அஞ்செழுத்தின் உண்மையினை விளக்கிப்பாடியது.

6. திருஞானசம்பந்த சுவாமிகள் திருநல்லூர்ப் பெருமணத்தில் திருமணக்காலத்தில் சிவசோதி தோன்றியபோது வீட்டுநெறியினை அறிவுறுத்தவும் சிவசோதியில் கலப்போர் பயம் நீங்கவும் பாடியது.

7. திருநாவுக்கரசு சுவாமிகள் தம்மைச் சமணர்கள் கல்லொடு கட்டிக்கடலிலே வீழ்த்தியபோது பாடியது.

8. "உன்னை நான் மறக்கமாட்டேன். அப்படி மறந்தாலும் என்னுடைய நாக்கு உன் நாமத்தைச் சொல்லிக் கொண்டிருக்கும்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியது.

9. சிவபெருமான் எழுந்தருளிய சிவத்தலங்களின் பெயர்களைக் கோவையாக அமைத்து திருஞானசம்பந்த சுவாமிகள் வாழ்த்திப் பாடியது.

10. திருநாவுக்கரசு சுவாமிகள் சிவத்தலங்களின் பெயர்களைக் கோவையாக அமைத்து வாழ்த்திப் பாடியது.

11. சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவத்தலங்களின் பெயர்களைக் கோவையாக அமைத்து வாழ்த்திப் பாடியது.

12. திருஞானசம்பந்த சுவாமிகள் பாடியது. தம் தகப்பனார் சிவபாதவிருதயர் தமது பூசைக்காலத்து நாடோறும் பிள்ளையாரது முத்திரையைத் தருதற்காக திருப்பதிகங்களை ஓதும் நியமமுடையவராய் இருத்தலையும், திருப்பதிகங்கள் நாளும் பெருகி எண்ணிறந்தனவாதலின் அக்கருத்து அவர்க்கு முற்றுப்பெறுதல் அரிதாதலையும் அறிந்த பிள்ளையார், இத்திருவெழுகூற்றிருக்கையை பாடி தமது தந்தைக்குத் தந்து இதனை ஓதின் எல்லாப் பதிகங்களையும் ஓதிய பேறு உண்டாம் என்று சொன்னார்.

மிகுதி அடுத்தவாரம் தொடரும்............

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# அகத்தியர் தேவாரத்திரட்டு

## 1. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய

பண் - நட்டபாடை

### திருப்பிரமபுரம்

## முதலாம் திருமுறை - குருவருள்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே. 1

முற்றலாமை இளநாகமோ டேனமுளைக் கொம்பவைபூண்டு
வற்றலோடு கலனாப் பலிதேர்ந்தென துள்ளங்கவர் கள்வன்
கற்றல்கேட்டல் உடையார் பெரியார்கழல் கையாற்றொழு தேத்தப்
பெற்றமூர்ந்த பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே. 2

நீர்பரந்த நிமிர்புன்சடை மேலோர்நிலா வெண்மதிசூடி
ஏர்பரந்த இனவெள்வளை சோரவென் உள்ளங்கவர் கள்வன்
ஊர்பரந்த உலகின்முதலாகிய ஓரூ ரிதுவென்னப்
பேர்பரந்த பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே. 3

விண்மகிழ்ந்த மதிலெய்ததுமன்றி விளங்குதலை யோட்டில்
உண்மகிழ்ந்து பலிதேரிய வந்தென துள்ளங்கவர் கள்வன்
மண்மகிழ்ந்த அரவம்மலர்க் கொன்றை மலிந்தவரை மார்பில்
பெண்மகிழ்ந்த பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே. 4

ஒருமைபெண்மை உடையன்சடையன் விடையூரும் இவனென்ன
அருமையாக உரைசெய்ய அமர்ந்தென துள்ளங்கவர் கள்வன்
கருமைபெற்ற கடல்கொள்ள மிதந்ததோர் காலம்இது வென்னப்
பெருமைபெற்ற பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே. 5

மறைகலந்த ஒலிபாடலொ டாடல னாகிமழு வேந்தி
இறைகலந்த இனவெள்வளை சோரவென் உள்ளங்கவர் கள்வன்
கறைகலந்த கடியார்பொழில் நீடுயர் சோலைக்கதிர் சிந்தப்
பிறைகலந்த பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே. 6

சடைமுயங்கு புனலன்அனலன் எரிவீசிச் சதிர்வெய்த
உடைமுயங்கும் அரவோ டுழிதந்தென துள்ளங்கவர் கள்வன்
கடல்முயங்கு கழிசூழ் குளிர்கானலம் பொன்னஞ் சிறகன்னம்
பெடைமுயங்கு பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே. 7

வியரிலங்கு வரையுந்திய தோள்களை வீரம் விளைவித்த
உயரிலங்கை அரையன் வலிசெற்றென துள்ளங்கவர் கள்வன்
துயரிலங்கும் உலகில்பல ஊழிகள் தோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங்கு பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே. 8

தாணுதல்செய் திறைகாணிய மாலொடு தண்டா மரையானும்
நீணுதல்செய் தொழிந்துந்நய வாதவென் உள்ளங்கவர் கள்வன்
வாணுதல்செய் மகளீர்முதலாகிய வையத் தவரேத்தப்
பேணுதல்செய் பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே. 9

புத்தரோடு பொறியில்சமணும்புறங் கூறநெறி நில்லா
ஒத்தசொல்ல உலகம்பலி தேர்ந்தென துள்ளங்கவர் கள்வன்
மத்தயானை மறுகவ்வுரி போர்த்ததோர் மாயமிது வென்னப்
பித்தர்போலும் பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே. 10

அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கை அலர்மேய
பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மானிவன்றன்னை
ஒருநெறிய மனம்வைத் துணர்ஞான சம்பந்தன் உரைசெய்த
திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே. 11

1. திருச்செவிகளிலே தோட்டினைப் பணிந்தவன்; ரிஷப வாகனத்தில் ஏறி ஒப்பற்ற தூய்மை பொருந்திய வெள்ளிய சந்திரனைத் தலையில் அணிந்து சுடுகாட்டில் உள்ள விபூதியைப் பூசி என் மனத்தைக் கவர்ந்த கள்வன்; இதழ்கள் பொருந்திய தாமரை மலரில் எழுந்தருளிய பிரமன் முற்காலத்தில் பணிந்து வழிபட அருள் செய்தவன்; பெருமை பொருந்திய சீகாழி என்னும் திருப்பிரமபுரத்திலே எழுந்தருளிய பெருமானாகிய இவன்தான்.

*He who possesses these six things: an army, a people, wealth, ministers, friends and a fortress, is a lion among kings.* 381

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. முதிர்ந்த ஆமையோடு; இளமையுடைய பாம்பு என்னும் இவைகளோடு பன்றியின் கூரிய கொம்பு ஆகியவைகளை அணிகலனாக அணிந்து, தசை கழிந்த பிரமனது தலையோட்டினைப் பிச்சைப் பாத்திரமாகக் கொண்டு பிச்சைபெற்று எனது உள்ளத்தைக் கவர்ந்த கள்வன்; பொருந்துதான நூல்களைக் கற்றலும் கேட்டலும் உடையவராகிய பெரியோர்கள் திருவடிகளைத் தமது கைகளால் வணங்கிப் போற்ற ரிஷபத்தை வாகனமாகக் கொண்டருளிய சீகாழி என்னும் திருப்பிரமபுரத்திலே எழுந்தருளிய பெருமானாகிய இவன்தான்.

3. கங்கை பொருந்த நீண்ட புல்லிய சடையின்மேல் ஒளி பெற்ற ஒளியுடைய சந்திரனையணிந்து அழகு மிக்க கூட்டமாகிய வெள்ளிய வளையல்கள் கழன்று விழுமாறு என் மனதைத் தன் வழிப்படுத்திக் கொண்டவன்; ஊர்கள் மிகுந்து பரவிய இவ்வுலகில் முதன்மை பெற்ற ஒப்பற்ற ஊர் இது என்று சொல்லுமாறு புகழ் மிகுந்த சீகாழி என்னும் திருப்பிரமபுரத்திலே எழுந்தருளிய பெருமானாகிய இவன்தான்.

4. ஆகாயத்தில் திரிந்து மகிழ்ந்த மும்மதில்களையும் எய்து அழித்ததே யன்றிமேல், விளங்குகின்ற பிரமனது தலையோட்டில் மனமகிழ்ந்து பலியேற்குமாறு எழுந்தருளி என் மனதைத் தன் வழிப்படுத்திக் கொண்டவன்; மண்ணுலகத்துள் வசித்தலை விரும்பிய பாம்பு, கொன்றைமாலை ஆகியவை நிறைந்து விளங்கும் மலை போன்ற மார்பில் உமாதேவியாரை வைத்து மகிழ்ந்த சீகாழி என்னும் திருப்பிரமபுரத்திலே எழுந்தருளிய பெருமானாகிய இவன்தான்.

5. ஒரு பாகத்தில் பெண்தன்மை அமையப் பெற்றவன்; சடைமுடியுடைய உருவமுடையவன்; ரிஷப வாகனத்தில் ஏறி வருகின்றவன் என்று சிறப்பாக எடுத்துச் சொல்ல விரும்பி என்னுடைய உள்ளத்தைத் தன் வழிப்படுத்திக் கொண்டவன்; கருமை நிறம் பொருந்திய கடல் கவர இச்சீர்காழி ஒரு காலத்திலே தோணியாகி மிதந்தது என்று சொல்லுமாறு சிறப்புப்பெற்ற சீகாழி என்னும் திருப்பிரமபுரத்திலே எழுந்தருளிய பெருமானாகிய இவன்தான்.

6. வேதத்தின் ஒலியோடு பொருந்திய சாம வேதத்தோடு திருக்கூத்தையுடையவராய், மழுவினைத் தாங்கி கையினிடத்திலே பொருந்திய கூட்டமாகிய வெள்ளிய வளையல்கள் சோர்ந்து விழுமாறு என் உள்ளத்தைத் தன் வழிப்படுத்திக் கொண்டவன்; இருள் அமைந்ததும் மணம் பொருந்தியதும் ஆகிய பொழிலிடத்தும் நீண்டு உயர்ந்த சோலைகளிடத்தும் தனது ஒளிக்கதிர்கள் சிந்துமாறு சந்திரன் பொருந்தித் தவழ்கின்ற சீகாழி என்னும் திருப்பிரமபுரத்திலே எழுந்தருளிய பெருமானாகிய இவன்தான்.

7. சடையில் தாங்கிய கங்கையை உடையவன் ஆகியும், கையில் ஏந்திய மழுவையுடையவன் ஆகியும், சினத்தினைச் சிந்தி அழகுடன் ஆடையின் மேல் பொருந்திய பாம்புக்கச்சையோடு திரிந்து வந்து எனது உள்ளத்தைத் தன் வழிப்படுத்திக் கொண்டவன்; கடலோடு சேருகின்ற உப்பங்கழி சூழ்ந்த குளிர்ச்சியுடைய சோலையிடத்தில், அழகிய பொன்னிறம் வாய்ந்த சிறகினையுடைய அன்னச் சேவல்கள் அன்னப்பெடைகளைச் சேருகின்ற சீகாழி என்னும் திருப்பிரமபுரத்திலே எழுந்தருளிய பெருமானாகிய இவன்தான்.

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு. 382

அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கம் என்ற நான்கு குணங்களிலும் குறைபாடு இல்லாதிருத்தல் அரசனுக்கு இயல்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. திருக்கயிலைமலையை அசைத்தெடுத்து வியர்வை மிகுந்த தோள்களுக்கு வீரத்தன்மையை உண்டாக்கிய பெருமையையுடைய இராவணனது ஆற்றலை வென்று அவனுள்ளத்தைத் தன் வழிப்படுத்திக் கொண்டவன்; துன்பம் மிகுந்த உலகத்தில் மைந்தர்களுக்கு மன்னும் பொழுதெல்லாம் பொறுக்கொணாது விளங்குகின்ற சீகாழி என்னும் திருப்பிரமபுரத்திலே எழுந்தருளிய பெருமானாகிய இவன்தான்.

9. திருமாலோடு, குளிர்ச்சி பொருந்திய தாமரை மலரில் எழுந்தருளிய பிரமனும், திருவடியையும் திருமுடியையும் முறையே அறிந்து கொண்டு இறைவனைக் காணுமாறு பெருக நெடுங்காலம் தேடியும் காணவொண்ணாத, அக்கினியுருவாய் வெளிப்பட்டு ஒளி பொருந்திய நெற்றியை உடைய பெண்கள் முதலான உலகத்தவர்கள் போற்றி வணங்க அவர்களைக் காப்பாற்றியருளுகின்ற சீகாழி என்னும் திருப்பிரமபுரத்திலே எழுந்தருளிய பெருமானாகிய இவன்தான்.

10. புத்தர்களோடு அறிவில்லாத சமணர்கள் பழித்துரைக்கவும், நன்னெறியில் நில்லாத உலகத்தவர் தத்தமக்கு ஏற்றவாறு சொல்லவும், பிச்சைபெற்று எனது உள்ளத்தைத் தன் வழிப்படுத்திக் கொண்டவன்; மதம் பொருந்திய யானையானது வருந்த அதன் தோலையுரித்துப் போர்த்துக் கொண்டதாகிய இத்தோற்றமும் மெய்யாம் என்று கூறுமாறு பித்தரைப் போன்று சீகாழி என்னும் திருப்பிரமபுரத்திலே எழுந்தருளிய பெருமானாகிய இவன்தான்.

11. அரிய நெறியை உடைய மறைகளில் வல்லவராகிய பிரமனால் உண்டாக்கப்பட்ட விசாலமான தடாகத்தில், மலர்கள் நிறைந்த பெருமையையுடைய பெருமானாகிய இவனை, ஒருமுகப்பட்ட மனம் வைத்துணர்ந்த திருஞானசம்பந்தன் பாடிய திருநெறியை உடைய தமிழ்ப் பாடல்களை ஓதவல்லவர்கள் தமது பழவினையைப் போக்குதல் மிக எளிதாகும்.

---

**நல்லொழுக்கங்கட்குக் காரணம்**

நன்றி யறிதல் பொறையுடைமை இன்சொல்லோ
டின்னாத எவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோ
டொப்புர வாற்ற வறிதல் அறிவுடைமை
நல்லினத்த தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து.

*(பொ.உரை)* தனக்குப் பிறர் செய்த நன்றியை அறிதலும், பொறையும், இன்சொல்லும், எல்லா உயிர்க்கும் இன்னாதன செய்யாமையும், நல்லினத்தாரோடு நட்பாடலும் என இவ்வெட்டு வகையும் நல்லோரால் சொல்லப்பட்ட ஆசாரங்களுக்குக் காரணம்.

**ஒழுக்கம் பிழையாதவரடையும் உறுதி**

பிறப்பு நெடுவாழ்க்கைசெல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்விநோ யின்மை
இலக்கணத்தா லிவ்வெட்டு மெய்துப என்றும்
ஒழுக்கம் பிழையாதவர்.

*(பொ.உரை)* நற்குடிப்பிறப்பு, நெடிய வாணாள், செல்வம், அழகுடைமை, நிலத்துக்குரிமை, சொற்செலவு, கல்வி, நோயின்மை என்று சொல்லப்பட்ட இவ்வெட்டினையும் இலக்கணத்தோடு நிரம்பப்பெறுவர் என்றும் ஆசாரம் தப்பாமல் ஒழுகுவோர்.

*ஆசாரக்கோவை*

---

*Never to fail in these four things: fearlessness, liberality, wisdom and energy: this is the kingly character.* 382.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வத் திருமுகம்

சைவப்புலவர்மணி
வ. செல்லையா

பாணபத்திரன் ஓர் இசை வல்லுனன். வரகுண பாண்டியன் கட்டளைப்படி அவனது அரண்மனையில் இசை நிகழ்ச்சிகளை நடாத்தி வந்தான். பாணபத்திரனுக்கு மதுரை சோமசுந்தரக் கடவுள் ஆலயத்தில் தினமும் இசைச்சேவை செய்ய விருப்பம் உண்டாகியது. அதனால் அவன் அரசன் சேவையை விடுத்து இறைவன் திருக்கோவிலில் எப்போதும் சென்று இசைபாடும் நியமம் பூண்டான். அவனுக்கு இத்தொழிலைத் தவிர வேறு எத்தொழிலும் இல்லையாதலால் வறுமை அடைந்தான். சோமசுந்தரக்கடவுள் அவனைப் பொறுக்கமாட்டாத வராகிப் பாண்டியன் திரவிய அறையிற் சென்று அங்கு வேண்டியளவு திரவியங்களை எடுத்து வந்து பாணபத்திரன் காணும்படி வைக்கலானார். "எம்பெருமான் வருந்தத் தரியான்" அல்லவா? தம் தொண்டர்க்கு வரும் துன்பங்கள் துயரங்களைத் தான் தாங்கி அவற்றினைத் துடைத்து வைப்பார். சில நாட்களுக்குப் பொற்காசுகளைக் கொணர்ந்து வைப்பார். சில நாட்களுக்கு இரத்தின ஆபரணங்களைக் கொணர்ந்து வைப்பார். இங்ஙனம் அவர் சாமரைக்குள்ள பொற்காம்புகள், சிங்காசனப் பொற்றகடுகள் யாவற்றையும் கவர்ந்து கொண்டு வைத்தார். இவற்றினை எடுத்துப் பாணபத்திரன் பிறர் அறியாத வகையில் உருக்க வேண்டிய வற்றை உருக்கியும், துண்டம்செய்ய வேண்டிய வற்றைத் துண்டம்செய்தும் பின்னர் அவற்றை விற்றுச் செலவு செய்து வந்தான்.

இங்ஙனம் காலங்கழிந்தது. இவனது இசைச் சேவை யாவரையும் மகிழ்வித்து நிகழ்ந்தது. குடும்பத்தினரும் யாதும் குறைவின்றி வாழ்ந்து வந்தனர். சில மாதஞ் செல்ல எல்லாம் வல்லவரான சோமசுந்தரக் கடவுளும் ஒன்றுங் கொடாதொழியப் பாணபத்திரனும் இசையைத் தொடர்ந்து நடாத்தி வணங்கிக் கொண்டு சும்மா வந்தான். ஒருநாள் அவன் சுற்றத்தாரோடு பசியினால் மிக வருந்திக் கொண்டு நித்திரை செய்தான். அப்பொழுது சிவபெருமான், அவனின் சொற்பனத்தில் தோன்றி "நாம் இதுவரையும் பாண்டியனது பொன்னறையி லிருந்து திரவியங்களைக் கவர்ந்து வந்து தந்தோம். பாண்டியன் அறிந்தால் வருத்தங் கொள்வான். "உட்காப்பும், புறக்காப்பும் உயர் குறிப்புமிருக்கக் கவர்ந்தது அற்புதம் இக் கள்வன் உயிர் தொறும் ஒளித்த கள்வனோ அறியேன் என்பான்." அத்துடன்றியும் பொன்னறைக் காவலர்க்குத் தண்டமும் கிடைக்கும். நம்மேல் உன்போல் அன்பு வைத்த சேரமானுக்கு ஓர் ஓலை எழுதித் தருவோம் கொண்டு போ" என்று திருவாய் மலர்ந்து, திருமுகப்பாசுரம் ஒன்றை எழுதிக் கொடுத்து மறைந்தார்.

அத் திருமுகப் பாசுரம் இது:-

"மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவும் பானிற வரிச்சிற
கன்னம் பயில்பொழி லாலவாயின்
மன்னிய சிவன் யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ் பயில் பாண பத்திரன்
றன்போ லென்பா லன்பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே"

[illegible] 333
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணபத்திரன் அத்திருமுகத்தைப் பெற்றுப் பட்டுவஸ்திரத்தினாலே மூடி வைத்துக் கொண்டு, திருக்கோயிலை வலம் வந்து வணங்கினான். அங்கிருந்தும் மேற்றிசை நோக்கி நடந்து சென்று மலைநாட்டை அடைந்தான். பின்னர் திருவஞ்சைக் களத்துக்குச் சென்று அங்குள்ள தண்ணீர்ப்பந்தலில் இருந்தான். அன்றிரவு சோமசுந்தரக் கடவுள் சேரமான் பெருமானாரின் கனவிலே தோன்றி "நாம் மதுரையிற் சித்தர்" என்று தம்மை நினைவு கூர வைத்தார். பின்னர் நம்முடைய பாணபத்திரன் என்னும் அன்பன் "நம்முடைய ஓலை கொண்டு உன்னிடம் திரவியம் வாங்கும் பொருட்டு வருகிறான். அவனுக்கு வேண்டும் திரவியங் கொடுத்து அனுப்பிவிடு" என்று கூறி மறைந்தருளினார்.

சேரமான் பெருமாநாயனார் கனவுகண்டதும் விழித்தெழுந்தார். அவர் பின்னர் முகம், கை, கால் கழுவி விபூதி தரித்து எம்பெருமானைத் தியானித்து வணங்கினார். மறுநாட் காலை தாம் கண்ட கனவினைத் தம்மவர்க்குச் சொன்னார். பாணபத்திரனைத் தேடிவரும்படி ஏவலாளர்களை அனுப்பினார். அவர்கள் பாணபத்திரனை எங்குந்தேடி ஒரு தண்ணீர்ப் பந்தலில் இருக்கக் கண்டு விரைந்து சென்று சேரமான் பெருமாநாயனார்க்குத் தெரிவித்தார்கள். அவர் தம் சேனையோடும் அவனிடம் சென்று, பாணபத்திரனைக் கண்டு சிரமேற் கைகுவித்துப், பாடியாடி நிலத்தில் வீழ்ந்து வணங்கினார். பின்னர் பாணபத்திரனிடம் திருமுகத்தைப் பெற்றுக் கண்ணிலொற்றி, முடிமேல் வைத்து, கண்ணீர் சொரிய, உடம்பு பூரிப்ப, உரோமஞ் சிலிர்க்க, அதனைப் படித்து எல்லையில்லா மகிழ்ச்சியில் ஆழ்ந்தார். அத்திருமுகத்தைப் பொற்றளிகையில் வைத்து யானையிலே ஏற்றிப் பாணபத்திரனை முன்னிருத்தித் தான் பின் இருந்து வெண்சாமரை வீசிக்கொண்டு, மங்கல வாத்தியம் முழங்க நகர்வலம் செய்வித்து மாளிகையையடைந்தார்.

அந்த பாணபத்திரனை ஸ்நானஞ் செய்வித்துப் பட்டுப் பீதாம்பரமணிவித்து ஓர் ஆசனத்தில் இருத்தினார். பின்னர் அர்ச்சித்துத் திருவமுது செய்வித்தும், கலவைச் சாந்து பூசி வெற்றிலை பாக்குங் கொடுத்து உபசரித்தார். பின்பு அவரை அழைத்துச் சென்று பொன்னறையைத் திறந்து காட்டி, "எம்பெருமானின் திருத்தொண்டரே! இத்திரவியமெல்லாவற்றையும் நீ எடுத்துச் செல்லும்" என்று வேண்டி நின்றார். பாணபத்திரன் எதிர் வணங்கி, "நீ அருளுவது எமக்குப் போதும்" என்றான். சேரமான் பெருமாநாயனார் கொடுப்பக் கொடுக்க, பாணபத்திரன் ஆபரணம் திரவியம் பட்டுப் பீதாம்பரம் பொற்சிவிகை யானை, குதிரை, முதலிய பலவற்றையும் வேண்டுமளவும் பெற்றுக் கொண்டான்.

சேரமான் பெருமானாயனார் பாணபத்திரனை ஏழடி பின் சென்று வழியனுப்பி வைத்து மீண்டார். பாணபத்திரன் மதுரையை அடைந்து சோமசுந்தரக் கடவுளை வணங்கிக் கொண்டு, மகிழ்ச்சியோடு வீட்டையடைந்தான். பின்னர் தான் பெற்று வந்த ஆபரணங்களில், வித்துவான்களுக்கும், கற்றோர் பிறர்க்கும் வேண்டுவன கொடுத்து எஞ்சியவற்றைக் கொண்டு குபேரன் போல் வாழ்ந்திருந்தான்.

*Vigilance, learning and bravery, these three things, should never be absent from the ruler of a country.*
383.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தஞ்சைப் பெரியகோவில் புதிய கொடி மர கவசங்கள் மெருகு ஏற்றப்படுகின்றன.

வி. பி. கே. மூர்த்தி
பாபநாசம், தஞ்சை மாவட்டம்.

தஞ்சை அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோவில் கொடிமரம் 1010 ஆம் ஆண்டு மாமன்னன் ராஜராஜசோழமன்னனால் மகா நந்திக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் பிறகு 1814 ஆம் ஆண்டு மராட்டிய மன்னர் சரபோஜி மகாராஜாவால் கொடிமரம் புன்னை மரத்தில் மாற்றி வடிவமைத்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

பல நூற்றாண்டு வெய்யிலிலும் மழையிலும் ஏற்பட்ட கவச விரிசல்கள் வழியாக நீர் இறங்கி காலப்போக்கில் கொடிமரத்தின் அடிப்பாகம் சிதிலம் அடைந்து சாய்ந்த நிலை ஏற்பட்டது. இதனைப் பரம்பரை அறங்காவலரும் மூத்த இளவரசருமான ஸ்ரீமந் எஸ். பாபாஜிராஜா பான்ஸ்லே சத்ரபதி அவர்களும் தேவஸ்தான இணை ஆணையரும் ஆன்மீக அன்பர்களும் சிவாச்சாரியார்களும் முயற்சி எடுத்து உபயதாரரின் உதவியுடன் புதிய தேக்குமரக் கொடிமரம் வடிவமைக்கப்பட்டு நிறுத்தப்பட்டது.

இதற்கு முன் திருவையாறு கல்யாணபுரம் பகுதியில் தமிழக அரசு வனத்துறையிலிருந்து சுவாமி தயானந்தசரஸ்வதி அவர்கள் 50 அடி நீள தேக்கு மரம் உபயமாக வாங்கி அளித்தார். பெரிய கோவில் வளாகத்தில் மரத்தினை உருட்டும்பணி மேற்கொள்ளப்பட்டது. கொடிமரம் மேலே பூசப்படும் தாமிரக் கவசத்தின் எடையைத் தாங்கும் பலம் குறைவாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதில் கவசபாகங்களை (சுமார் எடை 750 கிலோ) ஏற்றினால் வலுவிழந்து முறிந்துவிடும் என்பதால் இதனை மாற்றம் செய்ய சாஸ்திரி பெரியவரிடம் ஆலோசனை கேட்கப்பட்டது. அதன்படி அவரும் அதற்கு ஒப்புதல் அளித்தார்.

சுவாமி தயானந்த சரஸ்வதி சுவாமிகளும் வந்து பார்வையிட்டு ஒப்புதல் அளித்தார். அதன்படி கோவில் நிர்வாகம் வேறுமரம் தேர்வு செய்யும் பொறுப்பினை சுவாமிமலை பிரபல சிற்பக்கலைஞர் எஸ். கருணாநிதி ஸ்தபதியின் குமாரர் டி. மோகன்ராஜ் ஸ்தபதி வசம் வழங்கியது. அதன்படி திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, மயிலாடுதுறை, தூத்துக்குடி, தேவகோட்டை போன்ற பல இடங்களுக்குச் சென்று மரத்தேர்வு செய்யப்பட்டது. போதுமான நீளம் ஒழுங்கு அமையவில்லை.

இறுதியில் சென்னையில் புழல் என்னும் இடத்தில் உள்ள மர டெப்போ ஒன்றில் மலேசியா நாட்டில் இருந்து இறக்குமதியாகியுள்ளதாக தாம்பரத்தில் உள்ள மாபுரம் டிம்பர் டிப்போ மூலம் தகவல் அறிந்து அங்கு சென்று பார்வையிட்டு தேர்வு செய்யப்பட்டது. இதனைச் சென்னையிலிருந்து தனி ட்ரெய்லர் லாரி மூலம் ஏற்றி தஞ்சைப் பெரிய கோவிலுக்குக் கொண்டு வரப்பட்டது. இதன் நீளம் 50 அடி சுற்றளவு அடிப்பாகம் 5 அடி. இம்மரத்தினை உபயமாக வழங்கியவர் கும்பகோணம் வி. ஆர். [illegible] சன்ஸ் தொழிலதிபர் ராஜு அவர்கள் 09.12.2002 அன்று புதிய மரம் வடிவமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

சுவாமிமலை சிற்பி எஸ். கருணாநிதி ஸ்தபதியார் வந்து பார்வையிட்டு அமைப்பு முறைகளுக்கு உரிய ஆலோசனை வழங்கினார். அதன் படியே அவரது குமாரர்கள் குபேரன் ஸ்தபதி மோகன்ராஜ் ஸ்தபதி மற்றும் மரவேலை செய்பவர்களுக்கும் சிறப்பாகக் கொடிமரவேலை செய்துள்ளனர். இவர்கள் அனைவரையும் தஞ்சைப் பெரியகோவிலின் மூத்த இளவரசர் ஸ்ரீமந்ராஜா பான்ஸ்லே சத்ரபதி அவர்கள் கௌரவித்தார்.

தஞ்சைக் கொடிமரம் ஒரு வரலாற்றுச் சின்னமும் முத்திரையாக நின்று நிலைக்கிறது.


[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினெண் சித்தர்கள்

### (14) ஸ்ரீ தேரையர் (பொதிகை மலை)


Dr. எஸ். லோகநாதன் (B.S.M.S.(India) J.P.)
மருத்துவ கிளினிக், நாவாந்துறை, யாழ்ப்பாணம்.



பதினெண்சித்தர்களிலும் நவசித்தர்களிலும் இவர் அடங்குவார். வடமொழியில் "மஹாமுனி மஹாரிஷி" என்று இவரை அழைப்பர். இவர் ஒரு சாலைக்குறவி என்பது நூல்களின் வாயிலாக அறியமுடிகின்றது. மருத்துவக் கலையிலும் பல மொழிகளிலும் தேர்ச்சிபெற்றவராகவுமிருந்தார். ஒருமுறை மண்டையிடி உடைய ஒரு நோயாளியின் மண்டையோட்டைப் பிளந்து அதன் உள்ளேயிருந்த தேரையை வெளியில் எடுத்து அந்நோயாளியின் தீராத தலையிடியைத் தீர்த்த சித்தர் இவரேன்பதால் இவருக்குத் தேரையர் என்கின்ற பெயர் உண்டானது. சித்தமருத்துவத்தின் அமைப்பாகிய ஓமம், வாதம், வைத்தியம் என்பவற்றின் உட்பிரிவுகளில் நல்ல ஆய்வுத் திறனுடன் கூடிய புலமை பெற்றவர் இவராவர். இவரது சிறு பெயர் [illegible]முனி ஆவார். தொண்டைவள நாட்டில் பாலியாற்றின் வடகரையிலுள்ள திருமலைச்சேரி என்னும் சிற்றூரில் உதித்தார். இவரின் தந்தை நம்பிகுருசி ஆவார். தேரையரின் ஒரு தரும சௌமியர் என்றும், தருமசௌமியரின் ஒரு புத்திரர் என்றும் சித்தமருத்துவ வரலாறு நூல்கள் கூறுகின்றன. தேரையர் கரிசல், தேரையர் காப்பியம், தேரையர் யமக வெண்பா, தேரையர் வைத்திய காவியம் 1001, தேரையர் வாகடம், தேரையர் நிகண்டு, வெண்பா, தேரையர் சாப்பியம், தேரையர் தரு, நாடகம், அந்தாதி, மூலவர்க்கம், நாணமாகலி, எதுகைப்பா, மகா யமகம், நீர்க்குறி, நெய்க்குறி, தைலவர்க்கச் சுருக்கம், திவ்விய அலங்காரம், சிகிச்சைப்பிரயோகம், வெண்மருந்துகளை, பிரான குணாநூலித்தரு, வைத்தியப்பதிற்று, மருந்துப்பாரதம், கண்ணோய் வெண்பா, தேரையர் 500, தேரையர் 1500 ஆகியன இவர் இயற்றிய அரும்பெரும் சித்தமருத்துவ நூல்களாகும். இவர் பொதிகைமலையில் சமாதியடைந்தார்.

---

## சூரியன்கல் வடிவம் கண்டுபிடிப்பு



தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம் திருக்கருகாவூர் என்ற ஊரில் ஒரு முருகன் கோவில். இது பாடல் பெற்ற முருகன் கோவில்.

*நன்றி: வி. பி. கே. மூர்த்தி மாயூரம்.*

அங்குள்ள சூரியன்கல் உருவம் மிகவும் கலை அழகுடன் அமைந்திருக்கிறது. கிரீடம், காதணி, மார்பு அணி, பூணூல், இடுப்பு அணி, கையில் ஏந்திய தாமரை மலர்கள் அனைத்தும் ஒளி வட்டமும் அமைந்திருக்கிறது.

தொல்பொருள் ஆய்வாளரும் பட்டதாரி ஆசிரியருமான தஞ்சை தில்லை கோவிந்தராஜன் மற்றும் சில ஆய்வாளர்களும் இதனை ஆய்வு செய்து இது பன்னிரண்டாம் நூற்றாண்டு தொடங்கி பதின்மூன்றாம் நூற்றாண்டு கால வரையறுக்கப்பட்ட கலைப்பாணியைக் கொண்டது என கூறினர்.

உலகத்திற்கு கண்களாக இருந்து உலகை இயக்கும் நாயகனாக விளங்கும் இச் சூரியன் சிலையும் மதிக்கத்தக்கதென தில்லை கோவிந்தராஜன் விவரிக்கின்றார்.

---

*He is a king who, with manly modesty, swerves not from virtue and refrains from vice.* 384

# திருவிசைப்பா

முருகவே பரமநாதன்

"நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவனபோகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே"

திருவிசைப்பா

பா - பாட்டு, பாடல், கவி, செய்யுள். இசைப்பா - இசையோடு பாடும் பாடல். திரு என்பது தெய்வத்தன்மை நிறைந்த என்று பொருள். இப்பிரயோகம் சைவ வைணவ மதத்தின் தனிப்பட்ட பிரயோகம். எனினும் திருக்குரான், திருமறை என்ன இசுலாமிய, கத்தோலிக்க இன்றைய வழக்கு. இசை, இராகம், பண் என்பவற்றால் அமைந்து பாடப்பட்டது. தேவாரத்துக்குப் பிற்பட்ட காலத்திலே தான் பண்வரையறை செய்யப்பட்டது. திருவிசைப்பா எழுந்த காலத்திலேயே பண் அமைக்கப்பட்டு விட்டது. இசையோடு பாடுவதாலும், பண்ணமைந்த பாட்டுகளாலும், பண் சுமந்த பாட்டுத் திறத்தாலும் இப்பாடல்கட்கு இசைப்பா என்று பெயர். இவற்றைப் பாடியோர் ஒன்பதின்மர், பாடல் தலங்கள் 16. இவைகளிற் சிதம்பரத்துக்கு மட்டும் பதினொரு திருப்பதிகங்கள், ஏனைய 13 திருப்பதிகட்கும் ஒவ்வொரு திருப்பதிகம் அமைந்துள்ளன. திருவிசைப்பா நடராசப் பெருமானைப் பாடிய சிறந்த பிரபந்தம். பாடல் பெறாத சிவபதிகள் இவ்விசைப்பாவிலே இடம் பெற்றுள்ளன. 290 திருப்பாசுரங்கள் மட்டும் இப்பிரபந்தத்திலே இடம் பெற்றுள்ளன. ஒன்பதாந் திருமுறையில் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு அடங்கும். பஞ்சபுராணங்களிலொன்று திருவிசைப்பா. தமிழோசை பாடல் மறந்தறியேன் என்பது அப்பர் வாக்கு. நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினார் ஞானசம்பந்தர்.

"பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொளி தருதிருநீறுங்
குவளைமாமலர்க் கண்ணிபுங் கொன்றையும்
துன்றுபொற் சூழ்த்திருச் சடையுந்
திவள மாளிகை சூழ்தரு தில்லையுட்
திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறு மென்மனந்
தழல்மெழு கொக்கின்றதே"

திருமாளிகைத்தேவர் கோயில் -2

பெரிய பவள நிறமான மலையைப் பனி மூடியிருந்தாற் போன்று, ஒளிமிக்க சிவந்த திருமேனியையுடைய சிவன் மேல், வெண்மை ஒளிவீசும் திருநீறும், சிறந்த குவளை மலர் மாலையாகவும், கொன்றைப் பூ மாலையும் நெருங்கிய சுருண்ட பொன் மயமான திருச்சடையையுடையவனும், நாள்தோறும் மேலோங்கியுள்ள பெருமளவிய மாளிகைகள் சூழ்ந்த தில்லைப்பதியில் நடனம் செய்கின்ற வெண்ணீறணிந்த வெண் மேனியனாகிய சிவபெருமானை நினையுந் தோறும் என் மனமானது நெருப்பிலிட்ட மெழுகுபோல் உருகுகின்றது என இப்பாடலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

எம்பெருமானது அழகை நேரிற் கண்டனுபவித்த லாவண்யத்தையும், நினைக்க நினைக்க மனம் உருகி ஓடும் பான்மையும் வெளிக்காட்டித் திட்டியிருக்கிறார் திருமாளிகைத்தேவர். பவள

[illegible]

திருமான மலையிலே படர்ந்திருப்பது போல, சிவனது திருமேனியிற் திருநீறு பொலிந்து இலங்குகின்றது. கொன்றை மாலையும் நெருக்கமாகக் காட்சி தருகிறது. இவர் ஆடும் இடமோ பொன்னம்பலம். அப்பர் சுவாமிகள் மனத்தை பாகாய் உருக்குகின்றது. குவளை மாமலர்க்கண்ணி எம்பிராட்டி ஆனவள் மலர் போன்ற கண்களையுடைய உமாதேவி எனவும் பொருள் கொள்ளலாம். நடராஜனை பரமனை திருமேனி அழகைப்பற்றி படம் பிடித்துள்ளனர். அவர்களில் அப்பர் பெருமான், "குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும், பனித்தசடையும், பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்" எனப் பாடியுள்ளார். சுந்தரர், "பவளமால்வரையில் நிலவெறிப்பது போற் படர்ந்திருந்தது" எனப் பாடுகிறார். திருவிசைப்பாவிற் பல இடங்களிலே பவளம் என்ற பிரயோகம் அமைந்துள்ளது. கருவூர்த் தேவரின் வாக்கில் வந்த பாடலொன்று இது.

"பவளமே மகுடம் பவளமே திருவாய்
பவளமே திருவுடம் பதனில்
தவளமே களபந் தவளமே புரிநூல்
தவளமே முறுவல் ஆடரந்
துவளுமே கலையுந் துகிலுமே ஒருபாற்
துடியிடை யிடமருங் கொருத்தி
அவளுமே யாகில் அவரிடங் களந்தை
யணிதி கழாதித்தேச் சரமே"

*திருக்களந்தை ஆதித்தேச்சரம் - 5*

எம்பெருமானது திருமுடி, திருவாய், திருமேனி மூன்றுமே பவளம் போன்று சிவந்து இருக்கின்றன. திருநீறு, திருநூல் (பூணூல்), புன்னகைபோது அடிய புழுகள் எல்லாமே வெண்மையானவை. ஆடும்பாம்பொன்று அருகில் அசைந்து கொண்டிருக்கிறது. இடப்பக்கத்தில் உமையம்மை சிவகாமித்தாயார் பட்டும், மேகலையும் அணிந்து காட்சி தருகிறார். எழிலே வடிவான எம்பெருமான் அமர்ந்திருக்கும் திருப்பதி திருக்களந்தை பதிபெற்றுள்ள அழகு பொழி ஆதித் தேச்சரத் திருவினராதும். மதுரை, தவளம்-வெண்மை, களபம்-சந்து மன உருக்கத்தை அவலைப்பெட்ட மெழுகுக்கு ஒப்பிட்டார் போல மணிமொழியரும் தனக்கேயுரிய பாணியிற் பாடுகிறார்.

"தழலது கண்ட மெழுகது போலத்
தொழுது உளம் உருகி அழுது உடலம் கம்பித்து
ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையும் கொண்டது விடாதெனும்
படியேயாகி நல் இடையறா அன்பின்
பசுமரத்தாணி அறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
அகம் குழைந்து அனுகுலமாய் விதிர்த்துச்
..............................................................................
கற்றா மனமெனக் கதறியும் பதறியும்.

*போற்றித்திருஅகவல் 60-73*

திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார். அப்படியான மணிமொழியார் காட்டும் உருக்கம் புதுமையானது.

"வெள்ளந்தாழ் விரிசடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ் மேலாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னையாண் டாய்க்கு
உள்ளந்தாள் நின்று உச்சி யளவு நெஞ்சாம்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாம் தீவினையினேற்கே"

*திருச்சதகம் 21*

பொன்னை உருக்கிக் கசிவு நீக்கிப் புதுநகைசெய்பவர் மனமே உருகினால் அழுக்கற்ற புதுமனம் பெறும். இந்த உருக்கம் ஆனந்தத்தான் விட்டது.

*He is a king who is able to acquire (wealth) to lay up, to guard, and to distribute it.* 385

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தளைகளைவவை நினைதொறும் என்மனம் தழல் மெழுகொக்கின்றதே” என்பதை நேர்ந்தேன். பாடலைத்தது எது; பாட்டின் முடிவு என்ன பயன்பாது என்று திரும்பத் திரும்ப மீள மீள எம்மைச் சிந்திக்க வைக்கிறது. நாம் எங்கே? அவர்களெங்கே? இதிலும் பார்க்கப் பிழையேதுமே ஞானத்திலே அறிந்து விடையோ என்ற முடிவுக்கே வரச் செய்கிறது. எவ்வளவு உயரிய பாடல் அது.

நாம் எவ்வளவு பற்றுப் பாசங்களோடு வாழ்கிறோம். ஒரு வாயளவு இருந்தால் இன்னொன்று வாங்க நினைக்கின்றோம். கல்வீட்டில் வாழ்ந்து நாம் உப்பரிகையில் வாழ விரும்புகிறோம். எல்லா வசதிகளிருந்தும் நிறைவுடன் காணுகின்றோம் இல்லை. அழகான மனைவி இருந்தாலும் சின்ன வீடு தேடுகின்றோம். அப்படி எத்தனை ஆசைகள். பெருக்கும் புகழுக்கும் ஆசைப்படுகிறோம். தங்கமாக உருக்கி கழுத்தையும் கையையும் நிறைக்கிறோம். பெண் மேல் வைக்கும் ஆசையில், மோகத்தில் இலட்சத்தில் ஒன்றை எம்பெருமான் மீது வைத்தோமா? கருவூரார் கேட்கிறார்.

தத்தையங்கனையார் தங்கள்மேல்வைத்த
தயாவை நூறாயிரங் கூறிட்டு
அத்திலங் கொருகூறு உன்கண் வைத்தவருக்கு
அமருலகு அளிக்கும் பெருமை
பித்தனென் றொருகாற் பேசுவரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யுங்
கைத்தல மடியேன் சென்னிமேல் வைத்த கங்கை
கொண்ட சோளேச்சரத்தானே

தத்தை-கிளி, தயா-அன்பு, பாசம், நூறாயிரம் இலட்சம், கூறிட்டு-பிரித்து, பங்கிட்டு, அமருலகு-மோட்சம், கைத்தலம் சென்னிமேல் வைத்தல்-பரிசதீட்சை, கைத்தலம் எம்பெருமானின் திருக்கரங்கள். சென்னி-தலை.

உனது திருக்கரங்களை அடியேனது தலைமேல் வைத்து ஆசீர்வாதம் செய்த கங்கை கொண்ட சோளேச்சரப் பெருமானே! கிளியைப் போல் இனிமையாகப் பேசுகின்ற பெண்களிடத்து வைத்த ஆசையிலே இலட்சத்தில் ஒரு பகுதியை உன்னிடத்தில் வைத்த அடியவர்களுக்கு விண்ணுலகு (மோட்சம்) அளிக்கின்றாய். நின் கருணையைப் பாரீர், அது எல்லையில்லாதது. அவர்களுக்கு ஆசிவழங்கி அருள்பாலிக்கும் பெருந்தன்மை நின்னிடம் நிறைய இருக்கிறது. அதனால் நீ பெரியவன் தான். என்றும் இப்பாடல்.

காவிரித் தென்கரையிலமைந்த திருப்பதிகளி லொன்று திருமுகத்தலை என்பது. அம்பிகையின் பெயர் சாந்தநாயகி, அப்பர் பெயர் பன்னகாபரணர். இறைவனின் திருப்பெயரால் இப்பதி, இப்பெயர் பன்னகத் தெரு என அழைக்கப்படுகிறது. இவ்வாலயத்தின் உட்பிரகாரம் முகத்தலை எங்கும் இருக்கிறது. தலை, முகம், தோள்களோடு கூடிய இலிங்கம் முகத்தலை இலிங்கம் எனப்படும். இவ் இலிங்கம் ஐந்து முகத்தலை என முற்காலத்தில் அழைக்கப்பட்டது. இத்திருத்தலம் பற்றிக் கருவூர்த் தேவர் ஒரு பதிகம் பாடியுள்ளார். அது ஒரு விசித்திரமான சிந்தனையில் உருவானது.

[illegible]

"புவனநா யகனே அகவுயிர்க் கமுதே
பூரணா வாரணம் பொழியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதீ பன்னகா பரணா
அவனிஞா யிறுபோன்று அருள்புரிந் தடியேன்
அகத்திலும் முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலும் அமர்ந்தாய்
தனியனேன் தனிமைநீங் குதற்கே.

பாடலை அருளிப் போந்தவரின் உள்ளத்திலும் (அகம்) முகத்தலை என்கின்ற மூதூரிலும் இறைவன் எழுந்தருளி இருக்கிறான், என்ற உண்மையை உறுதிப்படுத்தும் இவ்வரிகள் எவ்வளவு அழகானது, புதிரானது! எனினும் இறைவன் உடனாக இருக்கின்றானென்றால், அடியவர் தனிமையில் வாழக்கூடாதென்பதற் காகவே என்று முத்திரை தமிழ்முத்திரை வைக்க இட்டுள்ளனர்.

திருவிசைப்பாவின் சிறப்பைக்கண்டு உயிர் உள்ள வரை உபயோகப்படுத்துவோமாக.

இராஜஸ்தான் மொழியிலே, கன்னடத்திலே, தெலுங்கிலே, இந்துஸ்தானத்திலே, வடமொழியிலே, ஆங்கிலத்திலே பூஜை செய்கிறார்கள். தொகுத்தார் பாமாலைக்குப் பூஜை செய்கிறார்கள் தமிழையும், திருமுறைகளையும் ஓரம் கட்டி விட்டார்கள். இவர்களெல்லாம் திருமுறை சிலவற்றை அப்படியே ஆங்கிலமாய் அச்சடித்துச் சில புலம் பெயர்ந்த நாடுகளிலே மரக்கட்டைபோற் படித்து என்ன பயன்?

***சைவ தமிழ்மறையாம் நம் மொழியையும், சைவசமயத்தையும் பண்பாட்டையும் பேணிக்காப்போமாக இந்தவை முறையின் யாவர் வாரிசுகள் என்பதை நிலைநாட்டுவோமாக.***



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன 23வது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் வெளியிட்ட வைவிக்குளம் சிவபுரம் சிவாலயத்திற்கு பணைவிக்கும் ஒன்றை வழங்கியருளும் காட்சியைப் படத்தில் காணலாம்.

*The whole world will exalt the country of the King who is easy of access, and whose words are without harshness.* 386

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

சைவசித்தாந்தம் பயில்வோம்

# சிவப்பிரகாசம்

உணர்த்தும் முறை

மட்டுவில் ஆ. நடராசா

மருவிய பொறியில் ஒன்றும் மாபூதம் ஐந்தில் ஒன்றும்
கருவிகள் நான்கும் நீங்காக் கலாதிகள் ஐந்துங் கூடி
ஒருபுலன் நுகரும் இந்த ஒழுங்கொழிந் துயிரும் ஒன்றுந்
தெரிவுறா தவனை நீந்தத் திரள்களும் செயல் இலவே. 63

இ-ள்: மருவிய பொறியில் ஒன்றும் - தத்தமக்கான விடயங்களைப் பொருந்திய ஐம்பொறிகளி லொன்றும், மா பூதம் ஐந்தில் ஒன்றும் - பெரிய பூதங்கள் ஐந்தில் ஒன்றும், கருவிகள் நான்கும் - அந்தக் கரணங்கள் நான்கும், நீங்கா கலாதிகள் ஐந்தும் கூடி - விட்டு நீங்காத கலாதி தத்துவம் ஐந்தும் ஆகிய பதினொரு தத்துவங்களையும் கூடி, ஒரு புலன் நுகரும் உயிரும் - ஒரு விடயத்தை அனுபவிக்கும் உயிர், இந்த ஒழுங்கு ஒழிந்து ஒன்றை தெரிவுறாது - இந்த முறையின்றி ஒன்றையும் அறியமாட்டாது. அத்திரள்களும் அவன் நீங்கின் செயல் இலவே - அத்தத்துவக் கூட்டங்களும் ஆன்மாவையின்றிச் செயற்படமாட்டா என்று.

ஆன்மா விடயங்களை அறியும்போது ஞானேந்திரியங்களைத் துணையாகக் கொண்டறியும். அவ்வாறறியும்போது, பொறிகள் ஒவ்வொன்றும் தாம் தாம் அறியக் கூடிய ஒவ்வொரு விடயத்தையே அறியும்.

இவ்வாறறியும் ஐம்பொறிகள் ஒவ்வொன்றும் தத்தமக்குரிய அகப்பூதங்களைப் பற்றுக் கோடாகக் கொண்டு அறியும். பூதங்களின் துணையில்லையேல் இந்திரியங்கள் விடயங்களை அறியமாட்டா.

கிரியாசக்தி விந்து தத்துவ வாயிலாக நியதியை அதிட்டிக்க, நியதி அவரவர் செய்த கன்மத்தை அவரவரே நுகருமாறு நியமிக்கும். கிரியாசக்தி, சத்தி தத்துவவாயிலாகக் கால தத்துவத்தை அதிட்டிக்க, காலம் முக்காலங்களிலும் உள்ள அனுபவத்தை ஆன்மாக்களுக்குக் கூட்டும்.

ஞானசக்தி சுத்தவித்தை வாயிலாக வித்தியா தத்துவத்தை அதிட்டிக்க வித்தை ஆன்மாவின் ஞானசத்தியை விளக்கிப் போகங்களை அறியச் செய்யும். இச்சா சத்தி ஈசுரதத்துவ வாயிலாக அராக தத்துவத்தை அதிட்டிக்க, அராகம் வினைக்கீடாக வரும் போகங்களில் ஆன்மாவுக்கு இச்சையை உண்டாக்கும். கிரியாசத்தி, சதாசிவ தத்துவ வாயிலாகக் கலையை அதிட்டிக்க, கலை ஆன்மாவின் ஆணவ மலத்தைச் சிறிதே நீக்கி, அதன் கிரியா சத்தியை விளக்கும்.

அராகம் மனதுக்கு உட்கருவியாய் நின்று போகங்களில் இச்சையை உண்டாக்கும். கலை சித்தத்துக்கு உட்கருவியாய் நின்று விரும்பிய போகங்களில் நினைவை எழுப்பும். நியதி புத்திக்கு உட்கருவியாய் நின்று அனுபவிக்க வேண்டிய போகங்களை நிச்சயிக்கும். வித்தை அகங்காரத்துக்கு உட்கருவியாய் நின்று நிச்சயிக்கப்பட்ட போகங்களில் அறிவை எழுப்பும்.

இவ்வாறு சிவசத்தியின் சிவதத்துவங்களைச் செலுத்த, சிவதத்துவங்கள் கலாதிகளைச் செலுத்த, கலாதிகள் ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியைகளை எழுப்ப, ஆன்மாவின் இச்சை அந்தக் கரணங்களிடத்தும் ஞானம் ஞானேந்திரியங்களிடத்தும் கிரியை கன்மேந்திரியங்களிடத்தும் நின்று விடயங்களை அறிந்து பற்றி அனுபவிக்கும்.

இவ்வாறு, ஆன்மா ஞானேந்திரியங்களால் அறிந்து கன்மேந்திரியங்களாற் பற்றி அந்தக் கரணங்களால் அனுபவிக்குமாறறிக.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தனக்கென அறிவி லாதான் தானிவை அறிந்து சாரான்*
*தனக்கென அறிவிலாத வாயில் தான் அறியா சாரத்*
*தனக்கென அறிவி லாதான் தத்துவ மென்ன நுவன்*
*தனக்கென அறிவ லைஃதேல் சகலமும் நுகருந் தானே. 64*

இ-ள் தனக்கு என அறிவு இலாதான் - தானாக அறியமாட்டாத ஆன்மா, தான் இவை அறிந்து சாரான் - தானாக இத்தத்துவங்களை அறிந்து அவற்றோடு கூடமாட்டாது. தனக்கு என அறிவிலாத வாயில் தான் சார அறியா - தானாக அறியமாட்டாத இந்திரியம் ஆன்மாவைக் கூடுதல் அறியாது. தனக்கு என அறிவு இலாதான் தத்துவமென்ன நுவன் - தானாக அறியமாட்டாத ஆன்மா தான் சார்ந்த தத்துவங்களின் சொரூபமே சொரூபமாக உடையவன். தனக்கு என அறிவலைஃதேல் இச்சகலமும் நுகரும் தானே - தானாக அறியும் அறிவினையுடைய சிவனால் இவை யெல்லாவற்றையும் அறிந்து தானே அனுபவிப்பான் எ-று.

*சகலமும் என்றது சத்த பரிச இரச ரூப கந்தங்களை*
*தனக்கென அறியானால் என்பது பாடபேதம்.*

முன்னைய செய்யுளில் ஆன்மா கருவிகளைக் கூடி அறியுமென்றும் ஆன்மாவையின்றிக் கருவிகள் அறியமாட்டா வென்றும் கூறப்பட்டது. அவ்வாறு கூறவே, ஆன்மாவும் கருவிகளும் கூடி அறியுமெனின் கருத்தா யாது என்னும் வினா எழும். அவ்வினாவுக்கு விடை கூறுகின்றது இச்செய்யுள்.

*கண்டறி புலன்கள் காணுங் கருத்தினால் ஒருத்தன் ஞானம்*
*கொண்டுளம் அறியு மென்னில் கொள்பவன் முதலி யாகும்*
*மண்டிய உணர்வு யிர்க்கா மன்னிநின் றறியு மென்னில்*
*உண்டிட வேண்டி யானுக் கொருவன்வே றுண்ட தாமே. 65*

இ-ள் கண்டு அறி புலன்கள் உளம் கருத்தினால் காணும் - அனுபவித்து அறிகின்ற ஐந்து விடயங்களையும் ஆன்மா மனத்தைத் துணையாகக் கொண்டு அறியும், ஒருத்தன் ஞானம் கொண்டு உளம் அறியும் என்னில் - அதுபோலச் சிவஞானத்தைத் துணையாகக் கொண்டு ஆன்மா அறியுமென்று சொன்னால், கொள்பவன் முதலியாகும் - சிவஞானத்தைக் கொண்டு நிற்கின்ற ஆன்மாவே கருத்தா ஆவான். மண்டிய உணர்வு உயிர்க்கா மன்னி நின்று அறியும் என்னில் - நிறைந்த ஞானமானது ஆன்மாவுக்காக அதைப் பொருந்தி நின்று அறியுமென்று சொன்னால், உண்டிட வேண்டியானுக்கு வேறு ஒருவன் உண்டதாமே - பசியை நீக்கும் பொருட்டு உணவை உண்ண வேண்டியவனுக்காக வேறொருவன் உண்ணுதலை ஒக்கும் எ-று.

"உளம்" என்பது, "கருத்தினால் காணும்" என்பதனோடுங் கூட்டப்பட்டது. கருத்து - மனம். கண்டு - அனுபவித்து. உளம் - உயிர். ஒருத்தன் - ஒப்பற்றவன். புலன் என்பது ஆகுபெயர். அது பொறியைக் குறிக்கின்றது.

"கண்டு அறி புலன்கள் காணும் கருத்தினால்" என்பதற்கு விடயங்களைக் கண்டறியும் இந்திரியங்கள் ஆன்மாவால் அறியும் முறைமை போல என உரை கூறுவாருமுளர். அது பொருந்தாது.

ஆன்மா மனத்தைத் துணையாகக் கொண்டு விடயங்களை அறிவது போல, சிவஞானத்தைத் துணையாகக் கொண்டும் விடயங்களை அறியுமென்பர் ஏகான்மவாதிகள். அவர் மதத்தை மறுத்து, "ஒருத்தன் ஞானம் கொண்டுளம் அறியுமென்னில் கொள்பவன் முதலியாகும்" என்பர்.

முதலி - கருத்தா - முதன்மையுடையவன்

"ஆன்மாவுக்கு அறிவில்லை" சிவனே ஆன்மாவைப் பொருந்தி நின்று அதற்காக அறியும் என்பர் பரிணாமவாதிகள். அவரை மறுத்து "உணர்வு உயிர்க்கா மன்னி நின்றறியு மென்னில் உண்டிட வேண்டியானுக் கொருவன் வேறுண்ட தாமே" என்பர்.

*இருள்தரு இரவி தானுந் தீர்த்தலும் இரவில் மன்னும்*
*பொருள்நிலை கண்டு மாந்தர் பொருந்திடு மாறு போல*
*மருள்நிலை யென்றும் நீங்க மகிழ்ந்துயிர் மன்னும் மன்னும்*
*அருளையும் அறிய ஞானந் தந்தனன் அறிவு மன்றே. 66*

*The world will praise and submit itself to the might of the king who is able to give with affability, and to protect all who come to him. 387.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ-ள்: இரவி தோன்ற வந்து நன் இருள் இரிதலும் - சூரியன் உதித்து மிகுந்த இருளை நீக்குதலும், இரவில் எல்லாம் பொருள் நிலை கண்டு மாந்தர் பொருந்திடும் அதுபோல் இராக்காலத்தில் காணக்கருதிய பொருள் இருக்கும் இடத்தைக் கண்டு மனிதர் அதனை அடையுமாறு போல, உயிர் மருள்நிலை எங்கும் நீங்க மகிழ்ந்து - ஆன்மாவானது பாசத் தத்துவங்களால் கேவல நிலை முற்றாக நீங்க அதனால் மகிழ்ந்து, தன்னுள் மல்லும் அருளையும் ஒழிய - மலத்திரைகளைக் கூட்டி மலமறைப்புச் சிறிதே நீக்கித் தன்னுள்ளே நிலை பெற்றிருக்கும் அருளையும் மறந்து, ஞாலத்து அறிந்தவாறு அறியும் - பூமியில் தானாக அறிந்தது போல அறியும் எ-று.

*அறிந்திடும் மனாதி வாயில் அவையவை அன்றே னாலே*
*அறிந்திடும் ஒன்றும் ஒன்றும் அறிந்திடா அவைபோல் யாவும்*
*அறிந்திடும் அறியுந் தன்மை அறிந்திடா கன்மத் தொன்மை*
*அறிந்தவை நுகருமாறும் அருளுவன் அமலன் தானே. 67*

இ-ள்: அவையவைகளே மனாதி வாயில் அறிந்திடும் - ஆன்மாவினால் மனம் முதலிய அந்தக் கரணங்களும் இந்திரியங்களும் ஆகிய கருவிகள் விடயங்களை அறியும், ஒன்றும் அறிந்திடா அவற்றில் ஒன்றும் தாம் ஆன்மாவினால் விடயங்களை அறிகின்றோமென்று அறியமாட்டா, அவை போல் - அந்தக் கரணங்களையும் இந்திரியங்களையும் போல், யாவும் அறிந்திடும் - ஆன்மாவும் சிவனால் யாவற்றையும் அறியும், அறியுந் தன்மை அறிந்திடா - தாம் சிவனால் அறியும் முறையை அறியாது, அமலன் தானே - நின்மலனாகிய சிவனே, கன்மத் தொன்மை அறிந்து - ஆன்மா முன் செய்த வினைகளை அறிந்து, அவை நுகருமாறும் அருளுவன் - அவ் வினைப் பயன்களை ஆன்மாக்கள் அனுபவிக்கும் படியும் அருள் செய்வான் எ-று.

*காட்டிடும் கரண மொன்றும் இல்லையேல் காணொணாதாம்*
*நாட்டிய இவற்றால் ஞானம் நணுகவும் ஒண்ணா முன்னம்*
*ஈட்டிய தவத்தினாலே இறையருள் உருவாய் வந்து*
*கூட்டிடும் இவற்றை நீக்கிக் குரைகழல் குறுகு மாறே. 68*

இ-ள்: காட்டிடும் கரணம் ஒன்றும் இல்லையேல் காணொணாதாம் - அறிவைக் கொடுக்கும் கருவிகள் ஒன்றும் இல்லையானால் ஆன்மாவால் ஒன்றையும் அறிய முடியாது, நாட்டிய இவற்றால் ஞானம் நணுகவும் ஒண்ணா - சொல்லப்பட்ட இக் கருவிகளால் ஞானத்தை அடையவும் முடியாது, முன்னம் ஈட்டிய தவத்தினாலே - முற்பிறவிகளிற் செய்த சரியை கிரியை யோகம் என்னும் சிவ புண்ணியங்களாலே, இறை அருள் உருவாய் வந்து - பரமசிவன் திருவருளே திருமேனியாகக் கொண்டெழுந்தருளி வந்து, இவற்றை நீக்கி - இத் தத்துவங்களை நீக்கி, குரைகழல் குறுகுமாறு கூட்டிடும் - தன்னுடைய திருவடியைப் பொருந்தும் படி அணைவிப்பன் எ-று.

பெத்த நிலையில் ஆன்மா கருவிகளின் துணையின்றி அறிய மாட்டாது. பாசமாகிய இக்கருவிகளால் ஆன்மாவுக்கு வரும் ஞானம் பாச ஞானமாகிய ஏகதேச ஞானம். இவற்றால் முற்றுணர்வாகிய சிவஞானத்தைப் பெறமுடியாது. அதனால் "கரணம் ஒன்றும் இல்லையேல் காணொணாதாம் நாட்டிய இவற்றால் ஞானம் நணுகவும் ஒண்ணா" என்றார்.

மிகுதி அடுத்த இதழில் தொடரும் ......

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல். 38

[illegible]

# திருக்கோயில் வழிபாடு

சி. பிரசாத்

சைவர்கள் திருக்கோயில் வழிபாட்டிற்கு முக்கியம் கொடுத்து ஒழுகும் மேன்மை பெற்றவர்கள். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும் "திருக்கோயில் இல்லாத ஊர் ஊரல்ல அடவி காடே" என்றும், "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் ஆன்றோர் கூறியுள்ளமை நோக்கற்பாலது. திருக்கோயில்கள் இறைவனின் திருவருள் வழங்கும் புனித இடங்கள். சைவர்களாகிய நாம் கடவுளைக் கண்டடையப் பல வழிமுறைகளைப் பயன்படுத்துகின்றோம். பண்டைக்காலம் தொட்டுத் தமிழர் கடவுட்பற்றும் வழிபாடும் கொண்டிருந்தனரென்பதற்கு மிகப்பழமை வாய்ந்த நூலாகிய தொல்காப்பியம் சான்று பகர்கின்றதை "கடவுள் வாழ்த்தொடு மன்னிய வரும்" எனும் தொடர் குறிக்கும். கடவுள் வழிபாட்டைப்பற்றி பரிபாடல் உரைக்கும்.

புனிதம் பொருந்திய திருக்கோயில்களைத் தூய்மையாகவும், புனிதமாகவும் வைத்திருக்க வேண்டியது வழிபடுவோர் கடமை. அவ்வாறே கோயிலினுள் செல்லும் போது நீராடித் தோய்த்து உலர்ந்த ஆடைகளை அணிந்து, விபூதி தரித்து, புறத்தூய்மை பெற்று, அகத்தையும் தூய்மைப் படுத்தி இறைவனை சிந்தித்தபடி அவனின் திவ்விய நாமங்களையே உச்சரித்தபடியே [illegible]களாகச் செல்லுதல் வேண்டும்.

ஒவ்வொரு நாளும் கோயிலுக்குச் சென்று வழிபடுவதே முறையானது. அவ்வாறாயினும் உலக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் அவ்வாறு செய்தல் இயலாது. அவர்களால் இதைச் செய்ய முடியாது. ஆகவே, விசேட தினங்களிலாவது நாம் இறைவன் காட்சிதரும் திருக்கோயிலுக்குச் சென்று வழிபட வேண்டியது அவசியமாகும். இவ்வாறு பெரியவர்கள் சிறுவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தால் போதாது. பெற்றோர்கள் தம் பிள்ளைகளை இளம் பராயத்திலிருந்தே கோயில்களுக்குக் கூட்டிச் சென்று இறைவனை வழிபாடு செய்யும் பழக்கத்தினை ஏற்படுத்த வேண்டும். எதனையும் பழக்கத்திற்குக் கொண்டு வரும்போதுதான் அது வழக்கமாகின்றது. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை செல்கிறது. ஐந்திலே வளையாதது ஐம்பதில் வளையும் இதனைப் பெற்றோர் உணரவேண்டும். பிள்ளைகளுக்குக் கோயில் வழிபாட்டுப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

நித்தியமும் நியமமாக ஆலயதரிசனம் செய்ய இயலாதவர்கள், விசேட தினங்களாகக் கொண்டாடப்படுகின்ற வெள்ளிக்கிழமை, சோமவாரம், மங்களவாரம், பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாதப்பிறப்பு, சூரியகிரகணம், சந்திரகிரகணம், சிவராத்திரி, நவராத்திரி ஆகிய புண்ணிய காலங்களில் ஆயினும் ஆலய தரிசனம் செய்தல் வேண்டும். கோயில்களில் நைமித்தியக் கிரியைகள், மகோற்சவம் ஆகியன நடைபெறும் காலங்களிலும் பொங்கல், மடை, அலங்காரத் திருவிழாக்கள் நடைபெறும் காலங்களிலும் விரதங்கள் நாட்களிலும் தவறாது ஆலயதரிசனம் செய்தல் வேண்டும்.

சைவநன்மக்கள் தாம் வாழ் நாடுகளில் இயல்புக்கு ஏற்றவகையில் நாயன்மார்களால் பாடப்பட்ட தலங்களுக்கும், மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புப் பெற்ற தலங்களுக்கும் யாத்திரை மேற்கொள்வது புண்ணிய காரியமாகும்.

*The king will be esteemed a god among men, who performs his own duties, and protects (his subjects).* 388

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மை அப்பனாக விளங்கும் கடவுளை அர்ச்சிக்கச் செல்லும்போது வெறுங்கையாகச் செல்லல் ஆகாது. வாழை, தேங்காய், பழம், வெற்றிலை ஆகிய நிவேதனப் பொருட்களுடனேயே செல்லவேண்டும். இவற்றைக் கொண்டு செல்ல இயலாதவர்கள் அபிஷேகத்திற்குத் தேவையான பால், இளநீர், மலர்கள் போன்றவற்றில் ஏதாவதைக் கொண்டு செல்ல வேண்டும். அவ்வாறு கொண்டு செல்ல இயலாதவர்கள் "யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை" என்ற திருமந்திர வாக்கின்படி வில்வம், அறுகு, [illegible] போன்ற பத்திரங்களையாவது எடுத்துச் சென்று வழிபடல் வேண்டும்.

திருக்கோயிலை அடைந்ததும் அமைந்துள்ள நிலைகளில் முகம், கை, கால்களை அலம்பிக் கொண்டு, கோபுரத்தை வணங்கி விட்டுக் கூப்பிய கரங்களுடன் திருமுறைகளை ஓதிக்கொண்டு, இறைவனையே சிந்தித்த எண்ணம், பக்தி சிரத்தையுடனே சென்று முறைப்படி வழிபாடு செய்தல் வேண்டும்.

பரந்த அளவில் வழிபாடு செய்யும் போது மந்திரம், கிரியை, பாவனை முதலிய முறைகள் அமையும். இவைகட்குத் தக ஆலயம் அமைந்திருக்கும். நாம் அன்புமயமான மன எழுச்சியால் நன்றி கூறிப் பாராட்டுதல் ஆலயங்களில் கண்டு அவ்விறைவனை புகழ்தல், போற்றுதல் என்பவையும் இடம்பெறும். இதைப் பின்வரும் பாடல் விளக்கும்.

*"புண்ணியஞ் செய்வோர்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணலை அதுகண்டு அருள்புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை யீசனை
நண்ணறி யாமல் நழுவுகின் றாரே"*

என்று திருமூலநாயனார் கூறியுள்ளார். நாவுக்கரசர் தம் வாழ்வில் கண்டு களித்த திருக்கோயில்கள் அளவிடற்கரியன. இதையே நாமும் செய்ய வேண்டும் என்பது அவரது சிந்தனை.

அதை.

*"கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம்
எற்றுக் கோநம னால்முனி வுண்பதே"*

என்று பாடினார்.

இறைவனுக்கிடுவது ஒரு பச்சிலை என்று குறைத்துக் கூறுகின்றார் திருமூலர். அபிஷேகித்து பூச்சூடி விளக்கேற்றி தூபதீபங்காட்டி வணங்கி வழிபடும் முறையை நாம் நன்கறிவோம்.

சிவஞானிகளைக் கண்டு நம் குறைகளைக் கூறி அவர் சொல்லும் வழிகளை ஓர்ந்து அவராது ஒழுக வேண்டும். இவற்றைச் செய்வது நம் போன்ற மக்களுக்கும் மிகப்பயனுள்ளதாக இருக்கும். இந்தய வழிபாடே ஆலய வழிபாட்டினும் கடினமானது. ஆலய வழிபாட்டில் இதுவும் அடங்கும். கண் முதலிய பொறிகளாலும் தலை முதலிய அங்கங்களாலும் தொழிற்படமாட்டா. இவைகள் சிவத்தொண்டிற் சென்றால் மாத்திரம் தீயவழியிற் செல்லாமல் இருக்கும். எங்களுக்குள்ளே மூத்தக்கருவியையும் தீயவழியில் இருந்து விலக்கி அதை ஒழுங்கு அடக்குவது மிக அரிது. அதற்கு நல்வழியும், பொருத்தமானதும் ஆலய வழிபாடு ஒன்றுதான். இதுவே தெய்வப்புலவரும் .....

*"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"*

என்று கூறினார்.

நற்றாள் தொழ இறைவன் குடியிருக்கும் வீடு ஆலயமே. ஆலய வழிபாடானது பிறந்தவர் இறந்து பிறவிக் கடல் நீந்தும் வரை உள்ளதாகும். பாதகன் முதல் பரம யோகிகளுக்கும் அவசியமானது ஆலயவழிபாடு. (பக்தர், சித்தர்), முத்தர் அவர்களுக்குமாம் அவசியம் வேண்டற்பாலதும் அதுவே.

[illegible]

"செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலங்கழீஇ அன்பரொடு மரீஇ
மாலறநேய மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே"

சிவபெருமான் சிவலிங்கத்திலே, சரியையாளர்க்கு மேயுள்ளபடாட்டு மறைந்து நின்று அருள் செய்வார். இதனையே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள், கடவுள் எங்கெங்கே நின்று அருள் செய்வார் என்ற வினாவிற்கு சிவலிங்கம் முதலிய திருமேனிகளிடத்தும், மெய்யடியார்களிடத்தும் நின்று அருள் செய்வார் என்றனர். கிரியையாளருக்கும் யோகியர்களுக்கும் பூசிக்கும் போது தோன்றிநின்று அருள்செய்வார் சிவபெருமான். ஞானிகளுக்கு அண்மைதராய் எப்போதும் வெளி நின்றருள் செய்வார்.

ஆலயமானது சைவசித்தாந்த உண்மைகளை உணர்த்தும், சாதித்தற்கும் இடமாயுள்ளது. நித்திய பூசையும் உற்சவங்களும் சிவபெருமான் செய்யும் ஐந்தொழில்களை விளக்குவன. நந்தி பலிபீடமாகிய இவை முத்தி முறையை விளக்கும். பலிபீடமானது பாசத்தை நீக்கும் சிவசக்தியென்றும், சிவலிங்கம் சிவானந்தத்தைக் கொடுக்கும் சிவமென்றும், நந்தியானது முத்திபெற்ற நந்த ஆன்மாவென்றும் அறிக. மலத்தை நீக்குவது ஆதலால் பலிபீடம் பத்திர லிங்கம் எனப் பொருள்படும். மங்கலமானது பாசநீக்கம்)

"ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலே றெனநிற்கும்
ஆய பலிபீட மாகும் நற்பாசமாம்
ஆய அரனிலையை யாய்ந்து கொள்வார் கட்கே"
என்பது திருமந்திரம்.

"பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டு ஆர்வத்தை உள்ளே வைத்து
விரும்பி நல்விளக்குத் தூபம் விதியினால் இடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டிபோல்வார் கடவூர் வீரட்டனாரே"

இவ்வாறு முறையாக வணங்கி வழிபட்டால் இறைவன் நமக்கு இடர்களைய இரங்குவான். பெறுதற்கரிய மனிதப் பாக்கியத்தைப் பெற்ற உயிர்களால் விழையப்படும் பேறுகள் பல. திருத்தினவாக இருந்தவினாலே அவற்றுக்குச் சாதனமாயிருப்பவற்றுள் ஆலயமும் ஒன்றாகும். ஆலய வழிபாட்டினாலே இம்மை, மறுமை, அம்மை என்னும் மும்மைப் பேறுகளையும் அடையலாம். சிவன் உயிர்களை ஆணவத்தினின்றும் நீக்கி அவைகளுக்குப் பேரின்பமாகிய திருவடித் தாமரையோடு சேர்த்தற்கரிய நலம் செய்யும் கிரியைகளுள் ஆலய வழிபாடு இன்றியமையாதது.

பசுவாகிய ஆன்மா பாசத்தைப் பின்விட வைத்து சிவத்தை நோக்கி நிற்பதுதான் பசுக்கூட்டம் பலியிடப்படுகின்றது. அடியைப் பெறுதற்கு இதுவே உபாயம் என்பது ஆகம உண்மையாகும். இனிக் கொடிமரத்திற்கு அருகிலுள்ள நந்தி பெரியதாயும் மூலத்தானத்திற்கு அருகிலுள்ள நந்தி அதே போன்றும் இருக்கும். ஆன்மாவின் பசுத்தன்மை தேய்ந்து குறைந்திருப்பதை இது உணர்த்தும். இதனைப் பதி, பசு, பாசம் ஆகியவற்றையும் ஆலயத்தில் குறிப்பாக வைத்து விளக்கியது என கூறலாம். கொடித்தம்பமற்ற கோயில்களுமுண்டு. இதுவே உட்பொருளாகக் கொண்டு தாயுமானவர் பின்வருமாறு கூறுகின்றார்.

"ஆன்மமயமான மனதைப் பலி கொடுத்தேன்" என்றும் இன்னும் "நாலெலிங்கமாந் தாபிக்கும் மனமுள்ளலிங்க ஏதும் பத்திரம்" என்கின்றது சைவசமய நெறி. சிவாலயத்திலே தத்துவங்களின் மேன்மையும், தொடர்பும், அவற்றை நீக்கும் முறையும் விளங்கும். மாயாமலத்தையேயொடு ஆகைச் சார்ந்து பரம்பொருளை சேரும்.

சகளீகரண சிவயோக பாவனையாய் ஆணவத்தை நீக்கும் சாதனமாகின்றது. இவை சிவயோகப் பேற்றுக்குத் துணையாயுள்ளன. சிவாலயத்தில் காட்டும் ஒலிகளும், செய்யும்

The whole world will dwell under the umbrella of the king who can bear words that embitter the ear. 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிமோகம் மாற்சரியம் முதலியவைகளும், போகத்திலே தோன்றும் ஒலிக்கும் இவைகளை வென்று சிவபெருமானைக் கண்டுகளிக்க வழி:

*"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக*
*வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக*
*நேயமே நெய்யும் பாலா நிறைய நீரமைய ஆட்டிப்*
*பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே"*

இதுதான் ஈசனைக் கண்டு களிக்கும் வழி என்கிறார் அப்பர் சுவாமிகள்.

ஆலயப் பிரதிட்டை எப்படி நடக்க வேண்டும்? கல்லாலும், செம்பு முதலிய உலோகங்களாலும் விதிப்படி கடவுள் விசேஷமாக எழுந்தருளச் செய்யப்படும் கிரியை பிரதிட்டை என்று நம்மால் அழைக்கப்படுகிறது. அவ்வடிவத்திற்கு வேதாகமங்களிலே சொல்லப்படும் மந்திர வடிவத்தையும், சடத்துவ வடிவத்தையும் கொடுத்தலே இக்கிரியையின் பெரும் பகுதியாகும். ஆதலின் பிரதிட்டை அமைப்பின்பு ஏற்படுத்தப்படுவது மந்திர அத்துவ வடிவங்களே. இத்திருவுருவங்களில் கிரியைப்படி 5 பிரதான பகுதிகள் உண்டு. கண் திறத்தல், விக்கிர சுத்தி, மந்திரம், தெய்வ ஆவாகனம், கும்பாபிஷேகம் என்பன.

மண்டபப் பூஜை ஆலயங்களில் நடக்கும் விசேஷ பூஜை ஆகும். கும்பபூஜைக்காகவும், அக்கினி காரியத்துக்காகவும், மண்டபம் வைத்து மண்டப பூஜை இடம்பெறும். சிவனுக்கும் மற்றுத் தெய்வங்களுக்கும் கும்பம் வைத்து ஓம குண்டத்திலே அக்கினியை உண்டாக்கி அதிலே மூர்த்தியைப் பூசிக்க வேண்டும். இதன் கிரியைகள் முடிந்தபின் எழுந்தருளும் விக்கிரத்தை வைத்து அதைக் கும்பத்தோடு தொடுத்து ஸ்பரிசாகுதி செய்தல் வேண்டும். இக்கிரியைகள் ஆலயங்களின் கும்பாபிஷேகங்களில் நடக்கும். கும்பத்திலுள்ள மந்திர நியாசகங்களை விக்கிரத்திலே சேர்த்து தெய்வத்தை ஆவாகனஞ் செய்தபின் கும்பத்தை மூர்த்தியிலே அபிஷேகித்து மகா அபிஷேகமும் விசேஷ பூஜையும் செய்க.

ஆலயங்களில் உற்சவம் நடைபெறுவது விழாக்காலமாகும். உத் - மேலான, சவம் - ஐந்தொழில் என்றும், உத் - ஞானம், சவம் - போக மோட்சம் என்றும் இரண்டு கருத்துக்கள் இதற்கு உண்டு. மேலான ஞானத்தையும் போக மோட்சத்தையும் கொடுப்பதென்றும் ஒரு கருத்து உண்டு. சிவபெருமான் ஐந்தொழில்களையும் செய்து உயிர்களைப் பாதுகாக்கும் முறையைத் திருவிழாக்கள் வெளிக்காட்டுகின்றன. இவற்றுள் கொடியேற்றம் வரையுள்ள கிரியைகள் படைத்தலையும், வாகனத் திருவிழாக்கள் காத்தலையும், தேர்த் திருவிழா அழித்தலையும், மௌனோற்சவம் மறைத்தலையும், தீர்த்தம் அருளலையும் குறிக்கும்.

எவ்வாறெனில் முதல் நாள் சரீரத்தை உண்டாக்குதலும், இரண்டாம் நாள் நல்வினை தீவினைப் பதித்தலையும், மூன்றாம் நாள் முக்குணங்கள் எழுப்புதலையும், நான்காம் நாள் உட்கருவிகளை முடிப்பித்தலையும், ஐந்தாம் நாள் ஆசை முதலியவைகளைக் கொடுத்தலையும், ஆறாம் நாள் பாவ ஞானம் நீக்குதலையும், ஏழாம் நாள் அருள் தொழில் செய்தலையும், எட்டாம் நாள் இம்மலங்களைக் கெடுத்தலையும், ஒன்பதாம் நாள் சிவஞானத்தைக் கொடுத்தலையும் குறிக்குமென்று கூறப்படுகின்றது. பத்து நாட்களுக்கு மேற்பட்ட திருவிழாக்களையும் இத்தொழில்கள் அமையத் தக்கதாக வகுத்துக் கொள்ளலாம். எல்லா ஆலயங்களிலும் இவ்வாறு கிரியைகள் நடைபெறுவதில்லை. அவ்வவ் விடயங்களின் தகைமையைப் பொறுத்து ஆலயங்கள் அமைந்திருக்கும். இதனால் திருவிழாக்களும் உயர்வு தாழ்வு உடையனவாயிருக்கும். திருவிழா சோமாஸ்கந்த நல்ல பெரும் கிரியைகள் வேறுவேறாக இருக்கும். கொடிமரம், மண்டபம் என்பன எல்லா விடயங்களிலுமில்லை. கொடிமரப்

[illegible]
[illegible] 300
[illegible]
[illegible]

பூஜை கொடி மரத்தில் கிழக்குச் சுவரில் லோக பாலகருக்கும் வேறு தேவர்களுக்கும் பூஜை இடம்பெறுமென்பது குறிப்பிடத்தக்கது. தெய்வ ஆலயங்களையின் மகா ஆசீர்வாதம் சொல்லப்படும். ஐந்தொழில்களையும் கடவுள், உலகங்களைக் காப்பாராக என்பது ஆசீர்வாதத்தின் உட்கருத்து.

சுவாமி வெளிவீதி வருதலில், இதில் வீதிகளுக்கேற்ப வேறுபாடுடைய கிரியைகள் உண்டு. ஒரு வீதியிலன்றி கோயில்களிலுள்ள பல வீதிகளுக்கும் ஆக வேண்டிய கிரியைகள் உண்டு.

மூன்று வீதிகள் ஸ்தூலம், சூக்குமம், காரணம் இவை முறையே பரு, நுண், மிகநுண், என்று கூறப்படும். இவை மூன்றும் உடம்புகளைக் கொண்டன. ஐந்து வீதிகள் அன்ன, பிராண, மனோ, விஞ்ஞான, ஆனந்த என்னும் ஐந்து கோசங்களைக் குறிக்கும் (கருதும்).

பலிபீடத்திலிருந்து பிரதட்சண இராஜகோபுரத்தைக் கண்டு முடிந்ததின் சுவாமி வெளிவீதிவரும். வீதியின் எட்டுத் திக்குகளிலும் லோகபாலகரை அழைத்து அவர்களுக்குப் பூஜை செய்யப்படும். இறுதியில் தீர்த்த உற்சவம், கொடியிறக்கம் போன்றன இடம்பெறும். ஆலயம், கோயில் தேவஸ்தானம் என்ற சொற்களால் அழைக்கப்படும்.

ஆலயங்களில் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், சபாமண்டபம், அலங்காரமண்டபம் எனத் தகுதிக்கேற்ப அமைந்திருக்கும். இவற்றை விட யாகமண்டபம், வசந்தமண்டபம், வாகனமண்டபம் என்பனவும் உண்டு. இவற்றை உள்ளடக்கியதாக ஆலயம் அமைந்திருக்கும்.


இவற்றை மட்டும் நாமறிந்திருந்தால் மட்டும் போதாது. அங்கும், அதற்கு வெளியேயும் கடைப்பிடிக்க வேண்டிய பல கட்டுப்பாடுகள் உள்ளன. அவைகளைத் தெரிந்து கொண்டு அதற்குத் தகுந்தபடி நாம் ஒழுக வேண்டும். அவையாவன, நாம் கோயிலுக்குச் செல்லும்போது நடை, உடை, பாவனைகளில் கவனமாக ஆசாரமாகச் செல்லுதல் வேண்டும். மற்றும் மிதியடி, கால் கழுவாது, செருப்புடன் ஆகாது. மற்றும், தொப்பி, தலைப் பாகை, போர்வை, (மாதர் கை) என்பவற்றுடனும் செல்லல் ஆகாது.

அதிரவிடைத்து வேறுவிதமாக நகைத்தல், மூக்குச் சிந்துதல், எச்சிலுமிழ்தல், மலசலம் கழித்தல், பயிர்வெட்டி புரளுதல், தலைமயிரை விரித்து விடல் என்பவற்றை நாம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். கோயில் மரம் என்பவற்றிற்கு உரிய பொருட்களை அபகரித்தல், கடவுள், அடியார், ஆசான், தந்தை, தாய் போன்றவர்களையும் வேத ஆகமம், திருமுறைகளையும் நிந்தித்தல் இத்தகைய குற்றங்களைச் செய்யாது தவிர்த்தல் வேண்டும். அவ்வாறு செய்பவர் மற்றும் கடவுளை வழிபாடு செய்பவர்கள் அதற்குரிய பேறாகிய சிவனருளில் இருக்கும் பெரும்பேற்றைப் பெறுவர்.

அடியவர்களாகிய நாமும் எம்பிரான் சேவடி தொழுது அவனருள் பெற்று உலகத்தை மேன்மையடையச் செய்வோமாக!

*"மேன்மை கொள் சைவநீதி*
*விளங்குக உலகமெல்லாம்"*

திருச்சிற்றம்பலம்



*He is the light of kings who has these four things: beneficence, benevolence, rectitude, and care for his people.* 390

Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org

# சைவப்பெரியார் புலோலியூர் சிவபாதசுந்தரனார்

### பேரம்பேச முடியாத கொள்கை

சைவ வாழ்க்கை வாழுவதும், சைவத்தின் மேன்மையை ஏனையோருக்கு உணர்த்தி அவர்களைச் சைவவாழ்வு வாழ வைப்பதும் சைவத்தைப் பிறமதத்தாக்கங்களிலிருந்து காப்பாற்றுவதுமே பெரியாருக்கு உவப்பான செயற்பாடுகள்.

'Glories of Saivaism' (சைவத்தின் மகிமை) என்று அவரெழுதிய கடைசி நூலிலே சைவ வாழ்க்கை (The Saiva Life) என்ற அத்தியாயம் பின்வருமாறு தொடங்குகிறது. "A Saivite is a worshipper of Siva, the Supreme God. The Saivite must therefore lead a life consonant with the greatness of the God he worships. He has a dignity to maintain... (முழுமுதற் கடவுளாகிய சிவனை வழிபடுபவன் தான் சைவசமயி. ஆகவே சைவனொருவன் தான் வழிபடுகின்ற கடவுளினது மகத்துவத்துக்கு இசைவானதொரு வாழ்வை நடத்துதல் வேண்டும். இதற்கிசைவான மேன்மையொன்றைப் பேணவேண்டியதான பொறுப்பொன்று அவனுக்குண்டு..."

இவ்வாறு ஆரம்பித்து, அப்பர் சுவாமிகளின் "நாமார்க்கும் குடியல்லோம்" எனத்தொடங்கும் தேவாரத்துள் நுழைந்து சைவனொருவனது வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டுமெனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அவ்வழி வாழ்ந்தும் காட்டினார்.

எவ்வளவு பெரிய பிரமுகரானாலும் சரி, தனது சமயத்திற்கு உடன்பாடில்லாதவற்றுக்காக, தனது கொள்கையைக் கைவிடவோ மாற்றவோ மாட்டார்.

திருக்கேதீச்சர ஆலயத்தில் நவக்கிரகங்களுக்குக் கோயில் அமைத்தமையை ஏற்றுக்கொள்ளாது திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபைத் தலைமைப்பதவியிலிருந்து விலகியமை, சமய விடயங்களில் பூரண அரசாங்கக் கட்டுப்பாடு இருப்பதை மூர்க்கத்தனமாக எதிர்த்தமை ஆகியன பெரியாருடன் அடிப்படைக் கொள்கைகளில் பேரம்பேச முடியாது என்பதற்கு நல்ல உதாரணங்கள்.

"எல்லாச் சமயங்களும் ஒன்று" "சமய சமரசம்" போன்ற போலிச் சுலோகங்கள் பெரியாரின் காதில் கேட்கத் தகாதன. இவ்வாறு போலிச் சுலோகங்கள் எழுப்புபவர்களைப் பெரியார் அவர்கள் "சைவத்துரோகிகள்" என அழைக்கத் தயங்கவில்லை. நான் கண்ட சிவபாதசுந்தரனார் என்ற நூலை எழுதிய பெரியாரின் அபிமானி ஒருவர் தமது அனுபவமொன்றைப் பின்வருமாறு எழுதுகிறார்.

(இளைஞனாய் யாழ்ப்பாணத்தில் வேலை பார்த்த போது பெரியாரின் சுந்தரனைக் கடவைத் தபோவனம் சென்று சந்தேகம் தெளிந்து வந்தவர் பின் கொழும்புக்கு வேலை மாற்றம் கிடைத்து கொழும்பில் கடமையாற்றியபோது நடந்த சம்பவத்தையே இங்கு எழுதியுள்ளார்.)

பணியால் பிறதேசத்திற்கு மாறவேண்டிய நிலை வந்தது. இடையிடையே கடிதம் எழுதுவதுண்டு. அவருடைய பதில்கள் மிகவும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இருக்கும். ஒரு முறை நான் இருந்துவரும் பகுதியில் நாவலர் விழாவைக் கொண்டாட உத்தேசித்தார்கள். அதில் நானும் ஏதோ பங்கு பற்றினேன். ஆனாலென்ன எனக்கு இறைவனைப்பற்றிச் சிக்கலல்லவா? நாவலர் பெரிய கல்விமான் என்று தெரியும். நிதானமாக ஒன்றை எடுத்துச் சொல்ல வராது. பெரியவர்களிடம் "நாவலர் பிரபந்தத் திரட்டு" ஒன்று இருக்கும். அதைப் பெற்றால் ஒருவாறு சமாளிக்கலாம் என்று எண்ணினேன். ஒரு கடிதம் வரைந்தேன். அப்புத்தகத்தை இரவல் தருமாறு கேட்டேன். இடையிடையே அங்கு நடந்த சில சம்பவங்களையும் குறித்தேன். ...... (மனக்கசப்பு ஏற்படாதிருக்கப் பெயர் குறிப்பிடவில்லை) என்றொருவர் வந்தார். பார்த்தால் பெரிய கல்விமான் போல் இருந்தார். துறவியாக காவியுடைதரித்துக் காட்சியளித்தார். ஆனால் அவருடைய பேச்சு மட்டும் எனக்கு அதிகம் பிடிக்கவில்லை. ஆங்கிலத்திற் பேசும் போது எல்லாச் சமயங்களும் ஒரே கடவுளையடையும் பல வழிகளென்றும் தமிழிற் பேசும்போது சைவந்தான் ஒரேயொரு மெய்ச்சமயம் என்றும் இவ்வாறு ஒரே மூச்சில் முரண்பாடாகப் பேசினார் என்று வரைந்தேன். அவரிடத்தில் ஒரு சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாரம் உண்டு. யாரர் எழுதினாலும் உடனே பதில் எழுதுவார். அடுத்த நாள் பத்திரிகை வரும் என்று காத்திருந்தேன். புத்தகம் வரவில்லை கடிதம் ஒன்று கிடைத்தது. (அக்காலத்தில் முதல் நாள் யாழ்ப்பாணத்தில் தபாலிட்ட கடிதம் அடுத்தநாள் கொழும்பில் கிடைத்துவிடும்). அதனை உடைக்காமலே என்னை அறியாமல் என்கின்ற ஒரு பயம். ஏதோ காரசாரமான சரக்கு அதற்குள் கிடக்கிறதென்று மனம் கூறியது. பதில் பின்வருமாறு - "உங்கள் தூஷணையைப்பற்றி பேசவோ உரிமை கிடையாது. எல்லாச் சமயங்களும் ஒன்று என்று சொல்லும் கூட்டத்தாரை சேரவோ பார்க்கவோ வேண்டாம் என்று உனக்குப் பன்முறை அறிவுறுத்தியிருக்கிறேன். அதற்கு மாறாக ...... (பெயர் மறைக்கப்பட்டுள்ளது.) இக் கூட்டத்திற்குப் போனமையால், சைவசமயமே மேன்சமயம் என்று வாழ்ந்த நாவலர் பிரபந்தத்தைத் தொடவே நீ உரியவரல்லை" என்று பளிச்சென்று மறுமொழி வந்தது.

இக்கடிதம் என் கண்ணைப் பறக்கத் திறந்தது. 'எல்லாச் சமயங்களும் ஒன்று' என்ற இந்தப் புதிய கலியுக அவதாரத்தாரின் உற்பத்தி யாது என்று ஆராயத்தொடங்கினேன். கடவுளே இல்லை என்று சொல்லும் புத்த சமயமும், மறுபிறப்பு கர்மவினை என்பவற்றைப் பற்றி அறியாத கிறிஸ்தவமும் ஆணவம், கன்மம், மாயை, ஆன்மா, கடவுள், மோட்சம் முதலியவற்றை விரித்து கூறும் சைவசமயமும் எவ்வாறு 'ஒன்று' ஆகும்? இது நான் முதற்கேள்வி. இரண்டாவதாக எல்லாம் ஒன்றென்று பறைசாற்றப் புத்தன், கிறிஸ்தவன், சோனகன் முன்வருவதில்லை. சைவர் என்றிருக்கும் ஒரு சிலர் மட்டும் ஏன் முன்வருவான்?

பாரததேசம் ஆங்கிலேயரின் ஆளுகைத்தளையில் இருந்தபோது, அக்கட்டைத் தகர்த்தெறிய ஒரு சில தேசாபிமானிகள் முன்வந்தார்கள். எல்லாச் சமயத்தவரும், எல்லாச் சாதியாரும், ஒன்று திரண்டால் தான் இது கைகூடும் என்ற நம்பிக்கை அவர்களுக்குப் பிறந்தது. சமயத் தலைவர்களெல்லாம் தந்தம் சமயமே பெரிதென்று வாதாடினர். இச்சமயவாதம் சுதந்திரப்போராட்டத்துக்கு முட்டுக்கட்டையாக இருப்பதை அறிந்து பலபெயரால் வணங்கப்படும் தெய்வம் ஒன்றுதான். எல்லாச் சமயங்களும் அதே கடவுளுக்குப் போகும் வழிகள் என்றும் 'ஒற்றுமை' போதிக்கத் தொடங்கினர்.

அவர்களுடைய நோக்கம் மிகவும் மேன்மையானது. ஆனால் கையாண்ட வழியோ தவறானது. இச்சமயங்கள் கூறும் உண்மைப் பொருள்கள், ஆதாரங்கள் எல்லாம் வேறுபட்டவை. ஒழுக்க நீதி போதிப்பதில் ஒத்திருக்கலாம். ஆனால் தத்துவ ஞானம் அனைத்தும் வேறுபட்டவையே. இவற்றை ஒன்றென்று கூறுவது அச்சமயஞானிகளையே பரிகாசம் செய்வதாகும். எவ்வாறு ஒவ்வொரு அரசியற் கட்சிகளும் தங்கள் தங்கள் கொள்கைகளை எடுத்துக் கூறுவதற்கு உரிமையுண்டோ அதே போல உரிமைதான் சமயத்திற்கும் உண்டு. அதனை மழுங்கப்பார்ப்பது உண்மைக்கும் நீதிக்கும் விரோதமாகும். மக்களிடை பொதுவான சமய இயல்பு இருப்பதை அறிந்து அதைத்தம் அரசியல் செல்வாக்கிற்காக உபயோகப்படுத்தாவிட்டால் சமயம் அரசியலில் புகாது; அரசியலும் சமயத்திற்குள் புகாது.

அரசியல்வாதிகள் போதித்த இந்தச் சமய ஒற்றுமையைச் சிலர் மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டனர். போதிக்கவும் தொடங்கினர். சிலர் மறுசமயத்தவரின் ஆதரவையும் புகழையும் பெறுவதற்காக ஒற்றுமையாளர்களானார்கள்........ (பெயர் மறைக்கப்பட்டுள்ளது.) இவ்வகுப்பைச் சேர்ந்தவர், கற்றவர், பெரியவர், முதியவர். ஆனால் சைவம் கூறாத சமரசக்கொள்கையைப் பறைசாற்றுவதால் சைவ சமயத்தைப் பற்றிக் கூறுவதற்கு அருகர் அல்லர். அக்கொள்கையை அவர் தாராளமாக எடுத்துச் சொல்லலாம். ஆனால் சைவசமயக் கொள்கையாக அதனைச் சாதிப்பது தான் பெரும்பாதகமாகும். தம்கொள்கையைப் பரப்புவதற்கு நாவலரை சைவசமயப் பெரியோரைப் போற்றல் கூடாது. இதனைத்தான் பின்னையவர்கள் பலமாகக் கண்டித்தார். இவ்விடத்தைப் பற்றி எழுந்த கடிதம் பின்வருமாறு:

அப்பர் சுவாமிகள் "நாமார்க்கும் குடியல்லோம்" என்று எல்லைவைத்த சைவனின் மகிமையை நீ பாழ்படுத்த வேண்டாம். எல்லாச் சமயங்களும் சமமானவை என்று போதித்த கூட்டத்திற்கு நீ போனதே பெரும் பிழையாகும். அப்படிப்பட்ட மனிதன் சைவத்துரோகியாகும். அரசியற் சேவையில் உதவிபுரிந்தமையால் இந்திய அரசியல் வாதிகள் அவரை மதிக்கின்றனர். அவர் புகழையும் அவ்வாறே அரசியற்கு உதவி புரிந்த மக்களிடையே தோன்றிய பிரமுகர்கள் முதலியோர்..............(பெயர் மறைக்கப்பட்டுள்ளது.) இவரும் பார்க்கச் சிறந்தவர்கள். யாழ்ப்பாணத்திலே தோன்றிய புலவர்களுக்கு மரியாதை செலுத்திய பின்பே யாழ்ப்பாணத்தவர் மற்றவர்களுக்கு வணக்கம் செலுத்த வேண்டும். அதுவே எனது உண்மையான மதி"

நன்றி - இந்துசாதனம்

விஜய பங்குனி புத்தகம்-115 - இதழ்-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவபூஷணம்

## தமிழ் விளக்கம்

சிவபெருமானை வழிபடும் முறையைச் சிவாகமங்கள் கூறும். இவ்வாகமங்கள் தனித்தனி சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என நான்கு பாதங்களை உடையன. சிவவழிபாடும் சரியை வழிபாடு, கிரியை வழிபாடு, யோக வழிபாடு, ஞான வழிபாடு என நால்வகைப்படும். நால்வகை வழிபாட்டிலும் ஞான வழிபாடே சிறந்தது. அதற்குக் காரணமாய் அதன் கருத்தைத் தன்னுள் அடக்கி நிற்பது கிரியை வழிபாடேயாம். இக்கிரியா வழிபாட்டினை உள்ளவாறு தெரிந்து கொள்ள ஆகமங்களில் உள்ள கிரியாபாதத்தை அறிந்து கொள்ள வேண்டும். அக்கிரியாபாதம் மிக விரிவாய் இருத்தலால் அவற்றைச் சுருக்கி ஸ்ரீ பஞ்சாக்கர யோகிகள் சைவபூஷணம் என்னும் நூலை வடமொழியில் சுலோக வடிவில் ஆக்கியுள்ளார். இதற்குச் சிவாகம சித்தாந்த பரிபாலன தமிழ் சங்கத்தார் உரை எழுதி வெளியிட்டுள்ளனர்.

1. எல்லா உலகத்துக்கும் நாயகன் நாயகியானவரும், முதன்மையான தம்பதிகளாயுள்ள பார்வதி பரமேசுவரர்களுடைய கண்களுக்குத் திருப்தியைச் செய்பவரும், யானைமுகம் உடையவருமாகிய விநாயகமூர்த்தியைச் சிறப்புப் பொருந்திய கல்வியென்னும் அமுதை அடைவதின் பொருட்டு நமஸ்கரிக்கின்றேன் என்க.

2. உண்மையான ஐசுவரியம் என்னும் மோக்ஷத்தை அடைவதின் பொருட்டும், சொல்லையும் பொருளையும் அறிதலின் பொருட்டும், சகல புருஷார்த்தங்களையும் தரும் விநாயகரை நமஸ்கரிக்கின்றேன் என்க.

3. ஒருவருக்கொருவர் செய்த புண்ணியவிசேஷத்தால் உதித்தவர்களும், ஒருவருக்கொருவர் பிரிவொன்றான சம்பத்தையுடையவர்களும், சகல உலகத்துக்கும் தாய் தந்தையர்களுமாய் விளங்கும் மங்களையான பார்வதியையும், சங்கரனான பரமேசுவரனையும் நமஸ்கரிக்கின்றேன் என்க.

4. காஞ்சிபுரத்தில் வசிக்கும் ஞான சிவாசாரியரின் திருவடித்தொண்டு செய்பவராகிய பஞ்சாக்கர யோகியால் இந்நூல் செய்யப்படுகின்றது என்க.

5. இந்த நூலில் சொல்லப்படும் விஷயம் சிவாகமங்களின் கிரியாபாதம். இந்நூலின் பயன் போகமோக்ஷங்கள். இந்நூலுக்கு அதிகாரி கிரியைகளைச் செய்விப்பதற்கும், செய்வதற்கும் வல்ல சிவாசாரியர் என்க.

6. எல்லா மங்களங்களையும் தருகிறவராயிருக்கிற தன்னுடைய இஷ்ட தெய்வமாயுள்ள ஸ்ரீமத் சாம்ப மகாதேவரை நமஸ்கரித்து பின்னர் மகாகணபதி, சுப்பிரமணியர், நந்திகேஸ்வரர் ஆகிய இவர்களையும், திருஞானசம்பந்தசுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய சமய குரவர்களையும், ஸ்ரீநந்திதேவர், சனற்குமாரமுனிவர், சத்திய ஞானதரிசனிகள் பரஞ்சோதி முனிவர், மெய்கண்ட தேவர் அருணந்தி சிவாச்சாரியார் ஆகிய சந்தானகுரவர்களையும், அடியார்கள் கூட்டமாகிய அறுபத்து மூவர், தொகையடியார் ஒன்பதின்மர் ஆக எழுபத்திரண்டு திருத்தொண்டர்களையும் தனது ஆசிரியரையும் வணங்கி, லலித எழுத்துக்களும் சொல்லமைப்புமாகிற தங்கத்தால் பிரகாசிப்பதாயும் சிவாகம வசனங்களாகிய இரத்தினங்களினாலே அழுத்தப்பட்டுள்ளதாயுமிருக்கும் சைவ பூஷணமென்னும் பெயருடையதாகிய இந்த நூல் என்னாலே சொல்லப் படுகிறது.

7. இந்த நூலின் முறையானது, இதற்குப்பின் இது இதற்குப்பின் இது என்னும் முறையில் சொல்லப்படவில்லை. மற்றெவ்வாறெனில், சிவாகமங்களின் கிரியாபாத விஷயமாக யாதொன்று சுருக்கமாக அறியப்படக்கூடியதாய் இருக்கின்றதோ, அதை விரித்துச் சொல்கின்றேன் என்க.

   (அவதாரிகை) பெரியோர்கள் இந்நூலை அங்கீகரிப்பாரென்று கூறுகின்றார்).

8. சாந்தரும், பொறாமையில்லாதவரும், வித்வத்தன்மையுடையவருமாயிருக்கின்ற சைவாசாரியர் கருணையால் கண்டத்து வாரங்களிலே இந்த நூலானது பொருந்தவுடன், சொல்லினாலும் பொருளினாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் குற்றமில்லாமல் நன்மையாகவே ஆகிவிடும். அது எதுபோலுமெனில், ஜம்புநதியின் நீர்த்துளியின் பரிசத்தினால் சகல பொருள்களும் நன்மை வாய்ந்த அபரஞ்சிப் (புடம் வைத்த) பொன்னானாற்போலும் என்க.

9. அனைவருக்கும் ஒவ்வொரு காரியத்தைச் செய்வதில் முற்பிறவிகளில் அவரவர் செய்த கன்மபரிபாகமே காரணமாகும். அவ்வாறாயினும், யான் இந்நூலைச் செய்வதற்குக் காரணம் பிழைபாரனைவருக்கும் அடிமை புண்ணியமுடைமையேயாம் என்க.

10. அநாதிசைவர், ஆதிசைவர், மகாசைவர், அநுசைவர், அவாந்தர சைவர், பிரவர சைவர், அந்திய சைவர் எனச் சைவர் எழு பிரிவினையுடையவராவர். அவருள், அநாதிசைவர் சிவபெருமான், ஆதிசைவர் சிவப்பிராமணர், மகா சைவர், மகாபிராமணர், அநுசைவர் க்ஷத்திரியரும் வைசியரும், அவாந்தர சைவர் சூத்திரர், பிரவர சைவர் சங்கர ஜாதிகள், அதாவது கலப்புப் பிறப்பினர், அந்திய சைவர் சேர்க்கப்பட்டவர்களாகிய ஏனையோர், இவ்வாறு சிவாகமங்களிற் கூறப்பட்டிருக்கின்றது. சில ஆகமங்களில் பத்து விதமென்றும் கூறப்பட்டிருக்கின்றதென்க.

11. எவர் சிவபெருமானுக்கு அன்புடையவராயும், சிவ தீக்ஷையினாலே ஒழுக்கமுடையவராயும், வேறுநெறியில் மனம் படாதவராயும், நல்ல சைவாசாரத்தையுடையவராயும், விலக்கப்பட்ட செய்கைகளில் பராமுகமுடையவராயும், நியமம் உடையவராயும் நித்திய கருமலோபம் இல்லாதவராயும், சைவக்குறியுடையவராயும், தீக்ஷைக்கு முற்பின் பூர்வஜாதி நாமம் இல்லாதவராயும் இருப்பாரோ அவரே சுத்தசைவர் என்க.

12. பிராமணர் முதலான நாலு வருணங்களின் ஆசாரங்களையும், பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் நாலு ஆச்சிரமங்களின் ஆசாரங்களையும் தள்ளிவிட்டு சிவாகமோக்தமான சரியையாதி ஆசாரங்களையுடைய சுத்தசைவரே, அதிவர்ணாச்ரமி என்று அறிக. இவர் காஷாய ஆடை வெள்ளை ஆடை ஆகிய இரண்டும் தரித்துக்கொள்ளலாம் என்று கிரணாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த அதிவர்ணாச்சிரமியின் ஆசாரத்திற்கு குடீசக சன்னியாசமே சிரேஷ்டமென்க.

13. பிராமணரைப் போல் கிருஹஸ்தீ செய்வித்தும் கொள்ளுதலும், மடபதியாயிருத்தலும், இவர் நல்லவரென்று பிறர் தாரைவார்த்தலும், தம்மிடத்தில் படிப்பவர்கள் சந்தோஷித்துத் தரப் பெறுதலும், நிதிபதிகளான அரசர் முதலியோரால் ஆதரிக்கப் பெறுதலும், தருமசாலையில் வருமானம் வருதலும், மாணாக்கர் குருதக்ஷிணையாகத் தரப்பெறுதலும், தனக்குரிய வியாபாரத்தினாலே வருமானம் வருதலும் ஆகிய இந்த வகைகளினாலே வருகின்ற ஆதாயங்களே சுத்த சைவர்களுக்குச் சீவனோபாயமென்க.

14. வித்வ சந்நியாசமென்றும், விவிதிசா சந்நியாசமென்றும், பகூதக சந்நியாசமென்றும், குடீசக சந்நியாசமென்றும், இவ்வாறு சைவசந்நியாசம் நான்கு திறப்படும். அவற்றுள் முன்னவை மனைவியற்றவர்கள். குடீசக சன்னியாசமென்பது காஷாய வஸ்திரதாரண முதலான சகல சந்நியாச தர்மங்களோடு மனைவி சகிதமாயிருப்பதாகும். அவாந்தர சைவர்களுக்குக் குடீசக சன்னியாசமே சிரேஷ்டம் என்க.

(அங்கு) சோடசக்கிரியையுடையாருக்குரிய அதிகாரத்தைக் கூறுகின்றார்.

15. எவர்கள் கர்ப்பாதானமுதல் பதினாறு சமஸ்காரங்களும், திவ்யாகம மந்திரங்களினாலே செய்யப்பெற்றிருக்கின்றார்களோ, அவர்களே சுத்த சைவர்களென்றும், இருபிறப்பாளர் என்றும், சிவாகமாதி படனத்துக்கு அதிகாரிகளென்றும் சைவாசாரியராதற்குரியவர்களென்றும் அறிக. ஆதலினாற்றான் கிரணாகமத்தில் சம்ஸ்காரமாகிய விசேஷ தீக்ஷை பெற்றவர்களே, சிவார்ச்சனையிலும், சிவாகமாதி படனத்திலும் அதிகாரமுடையவராவரென்று கூறப்பட்டிருக்கிறதென்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. இங்ஙனம் சொல்லப்பட்ட மிருதி அநுட்டானத்தினாலேயே பிராமணத்துவம் உண்டென்னின், அனைவருக்கும் மேலானவரான மகாதேவர் திருவுளம் பற்றிய ஆகம அநுட்டானத்தினால் ஏன் பிராமணத்துவம் உண்டாகாது. உண்டாகவில்லையாயின் அவர்களால் பூசிக்கப்படும் திருக்கோயில்களிலே சென்று கடவுள் உண்டென்னும் புத்தியுடன் நமஸ்காரம் முதலான வழிபாடு செய்தல் கூடாதாகும். ஆதலால் மிருதிவாக்கியங்களிலும் சிவாகம வாக்கியங்களே வலிமையுடையனவென்றும் அந்த வாக்கியங்களினாலே பெறப்படும் பிராமணத்துவமே பிராமணத்துவம் என்றும் அறிக.

17. விறகிற்கு அக்கினியின் சம்பந்தம் வந்த பின்னர், முன்னுள்ள பசுமை சம்பந்தமான வாசனையும் விறகு என்ற பெயரும்போய், அக்கினி என்னும் வடிவமும் தணல் என்னும் பெயரும் வந்தாற்போலவும், இரும்பிற்கு ரசகுளிகையின் சம்பந்தம் பட்ட பின்னர் முன்னுள்ள கருவடிவமும் இரும்பென்னும் பெயரும் போய், ஒளிவடிவமும் பொன்னென்னும் பெயரும் வந்தாற் போலவும் முத்துச்சிப்பியிலே விழுந்த நீருக்கு முன்னுள்ள நீர்வடிவமும் நீரென்னும் பெயரும்போய், மதிப்புள்ள ஒளிவடிவமும் முத்தென்னும் பெயரும் வந்தாற்போலவும், அப்படியன்றியும், மேருவைச் சேர்ந்த காகம் பொன்னிறமானாற் போலவும் மேகத்தைச் சார்ந்த சமுத்திர நீர் நல்ல தன்மையானாற் போலவும், மகத்தான நாவற்பழமரத்தின் நதியிலுள்ள நீரைச்சார்ந்த ஓடு முதலிய அனைத்தும் உயர்ந்த பொன்னானாற்போலவும், அவ்வாறன்றியும் கிரிய விசேடத்தாலுளவாகும் புழுவும் ஆகிய இவற்றுடைய கிரியையானவிதும் சந்நியாசிகள், பக்தர்கள் சிரேஷ்டரானாற்போலவும், காசிநகரத்தை அடைந்து மகோபதேசம்பெற்ற அனைவரும் அவ்வூர் பற்றி சிவரென்ற பெயர் பெற்றாற் போலவும், அவ்வாறே சிவதீக்ஷா சம்ஸ்காரம் பெற்ற அனைவருக்கும் முன்னுள்ள சாதியும் பெயரும்போய் வேறொரு கோத்திரமும் வேறொரு பெயரும் ஒரு வகுப்பும் உண்டாகும் என்று அறிக. (17, 18, 19)

20. சிவசம்ஸ்காரம் என்னும் சமயதீக்ஷையில் நின்று சிவனுடைய அடையாளமாகிய விபூதி உருத்திராக்கம் தரித்த சிவபக்தர்களை, எவனொருவன் முன்னுள்ள சாதியை நினைத்து நிந்தை செய்கின்றானோ, அவன் பிரமாவினுடைய நாளிலே பதினைந்து நாள் நரகத்திற்கிடப்பானென்றும், அவரினும் அதிகமான விசேட தீக்ஷையுடையாரை நிந்தை செய்தவன் விஷ்ணுவினுடைய நாளிலே ஐந்து நாள் நரகத்திற்கிடப்பானென்றும், அவரினும் அதிகமான நிருவாணதீக்ஷையுடையாரை நிந்தை செய்தவன் உருத்திரனுடைய நாளிலே மூன்று நாள் நரகத்திற் கிடப்பானென்றும் அவரினும் அதிகமான சைவாசாரியராய், ஆசாரியராயிருப்பவரை நிந்தை செய்தவன் [illegible] வருடத்தில் மூன்று வருடம் நரகத்திற் கிடப்பானென்றும் இவ்வாறு சர்வஞானோத்தரமென்னும் ஆகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றதென்க.

21. நான்காவது வருணத்தில் உதித்தவரான சற்சூத்திரர் சிவதீக்ஷையின் மகிமையினால் பிராமணசிரேஷ்டராவர். ஆயினும் வேதமோதல் முதலான வைதீகக் கிரியைகளில் எப்பொழுதும் அதிகாரமுடையவராகார். அதனால் இவருக்கு பிராமணத்தன்மையில்லையென்றல் கூடாது. அஃது ஏதுபோலுமெனின், பிராமணப்பெண்களுக்கும் பிராமண சந்நியாசிகளுக்கும் பிராமணத்துவமிருந்தும், வேதமோதல் முதலான கிரியைகள் செய்தல் கூடாதவாறு போலுமென்க. இவ்விஷயத்தில் வேதாகமங்கள் பிரமாணம். இவ்வுண்மையையறியாது நான்காவது வருணத்துச் சைவன், மறைமேற்கத்துக்குரிய தாம் படிப்பதற்குரிய சிவாகமம், திராவிட நூல்களைப் படியாமல் வைதிகக்கிரியைகளைச் செய்யின் அவனுக்கு நரகமேற்படுவதுமன்றியும், அவன் செயல் பெரியோர்களுக்கு உடன்பாடில்லை என்றும் அறிக.

மீதி அடுத்த இதழில் தொடரும்...........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நினைவிற் கொள்வதற்கு

**சுபானு**
**ஆனி**

| | | | |
|---|---|---|---|
| 01 | 15-06-2003 | ஞாயிற்றுக்கிழமை | மாதப்பிறப்பு |
| 03 | 17-06-2003 | செவ்வாய்க்கிழமை | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 09 | 23-06-2003 | திங்கட்கிழமை | கலிக்காமர் குருபூசை |
| 12 | 26-06-2003 | வியாழக்கிழமை | கார்த்திகை விரதம் |
| 13 | 27-06-2003 | வெள்ளிக்கிழமை | பிரதோஷ விரதம் |
| 15 | 29-06-2003 | ஞாயிற்றுக்கிழமை | அமாவாசை விரதம் |
| 19 | 03-07-2003 | வியாழக்கிழமை | சதுர்த்தி விரதம் |
| 20 | 04-07-2003 | வெள்ளிக்கிழமை | ஸ்கந்தபஞ்சமி |
| 21 | 05-07-2003 | சனிக்கிழமை | மாணிக்கவாசகர் குருபூசை<br>குமாரஷஷ்டி விரதம், நடேசரபிஷேகம்<br>அமர்நீதியார் குருபூசை |
| 22 | 06-07-2003 | ஞாயிற்றுக்கிழமை | உதயம் ஆனி உத்தரதரிசனம் |
| 27 | 11-07-2003 | வெள்ளிக்கிழமை | பிரதோஷ விரதம் |
| 29 | 113-07-2003 | ஞாயிற்றுக்கிழமை | பூரணை விரதம் |

### சந்தா நேயர் கவனத்திற்கு

* உரிய காலத்தில் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளவும்.
* முகவரி மாற்றம் இருப்பின் எமக்கு அறியத்தரவும்.
* இதழ்கள் ஒழுங்காகக் கிடைக்காவிடின் எம்முடன் தொடர்புகொள்ளவும். கிடைக்காத இதழ்களை அனுப்பிவைப்போம்.

## சைவநீதி மாத இதழ்

**பெறுமதி விபரம்**

தனிப்பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில்
ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி:

*C. Navaneethakumar*
No30,Ramya Road, Colombo-04,
Sri Lanka.
T'Phone No: 580458

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# புத்தக விற்பனை

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# திருவாசகம்

## வெளிவந்துள்ளது.

நீண்டகாலப் பாவனைக்கு ஏற்றவண்ணம் பிளாஸ்டிக் கவருடன் கூடிய திருவாசகம் விற்பனைக்கு உண்டு. பிரதி ஒன்றின் விலை ரூபா 150/- மட்டுமே. மொத்தக் கொள்வனவிற்குக் கழிவு உண்டு.

* விதியை வெல்வது எப்படி?
* திருவருட்பயன் - மூலமும் உரையும்

ஆகிய நூல்களும் விற்பனைக்கு உண்டு.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

கிடைக்கும் இடம்:

சைவநீதி
195, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.

எங்களிடம்,

ஐம்பொன், வெள்ளி, பஞ்சலோகம் வார்ப்பு விக்கிரகங்கள், வீட்டுப்பூசைப் பொருட்கள், கலைநயம் மிக்க சிலா விக்கிரகங்கள், கோபுரக்கலசங்கள், பட்டுக்குடைகள், கும்பக் குடைகள், சந்திரவட்ட, பூச்சக்கரக் குடைகள், ஆலவட்டம், சுருட்டி மகர தோரணம், திரைச் சீலைகள், வெள்ளி, முத்து, கிரீடங்கள், வாக மாலை மற்றும் மின்சார மங்கள வாத்தியங் கள், இந்திய கலைத்திறம் படைத்த குத்து விளக்குகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

## கலையரசி

**23/1, விவேகானந்த மேடு,**
**கொழும்பு-13. தொ.பே: 478885**

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

பாரம்பரிய சிற்பக் கலைஞர்களின் கைவண்ணத்தில்

| | |
|---|---|
| ☞ கருங்கல் விக்கிரகங்கள் | ☞ செப்பு விக்கிரகங்கள் |
| ☞ கருங்கல் ஆசனங்கள் | ☞ ஐம்பொன்விக்கிரகங்கள் |
| ☞ கருங்கல் கோமுகைகள் | ☞ கலசங்கள் |
| ☞ கருங்கல் தளவரிசைகள் | ☞ திருவாசிகள் |
| ☞ கருங்கல் படிகள் | ☞ கொடி ஸ்தம்பங்கள் |
| ☞ கருங்கல் நிலைகால்கள் | ☞ செப்பு அங்கிகள் |
| ☞ கருங்கல் போதிகைகள் | ☞ வெள்ளி அங்கிகள் |
| ☞ கருங்கல் தூண்கள் | ☞ தங்க அங்கிகள் |
| ☞ கருங்கல் பாவுகற்கள் | ☞ ஆசனத் தகடுகள் |
| ☞ கருங்கல் வரிக்கற்கள் | ☞ கீரிடங்கள் |

*மற்றும் அனைத்து கருங்கல் சிற்ப வேலைகளுக்கும் உலோக சிற்ப வேலைகளுக்கும்*
ஸ்தபதி சு. சண்முகவடிவேல்

அபிராமி சிற்ப நிலையம்
*61, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா, இலங்கை.*

Regd. No. QD/48/News 2003 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் லக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு 20-05-2003 இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org